
# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

## சித்திரைச் சிறப்பிதழ்

1962





வாசக நேயர்கள்
எழுத்தாள நண்பர்கள்
விளம்பரதாரர்கள்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது
**புத்தாண்டு**
**வாழ்த்துக்கள்!**

ஆசிரியர், 'புதினம்'


## வேஷமும் விஷயமும்

[இலக்கிய சர்ச்சை]

கும்மி அடி; ஓடிக்
கும்மி; அடி; மிகக்
குனிந்து கை கொட்டிக்
கும்மியடி;
நம்மைப் பிசாசு
பிடித்ததென்றால், இதை
நாடே தெரிந்திடக்
கும்மியடி!

கன்னத்தில் வேர்வை
வழிந்து பவுடர்
கழுவுண்டு போய்விடின்
போகட்டுமே;
பின்னல் சுழன்று
சுழன்று விழுந்திடப்
பின்னே பாராமலே
கும்மி அடி!

பொட்டுச் சிவப்புக்
கரைந்து கறுப்புப்
புருவத்து மையில்
கலக்கின் என்ன?
பட்டுப் பாவாடையின்
வட்டத்துள்ளே நின்று
பாதிச் சிரிப்பொடுங்
கும்மியடி!

கண்ணுடிக் காப்புகள்
கையிற் கிலுங்கிடக்
கால்கள் புவியினிற்
பாவல் இன்றி,
"பெண்ணோ இவர்? குடிப்
போதையரோ'' என்று
பேசும் படி நின்று
கும்மியடி!

புத்தி கலங்கப்,
புழுதி கிளம்பிடப்,
பூச்சு விளங்க,
நடுவினிலே
வைத்த துரும்பினைச்
சுற்றி வலம் வந்து
வந்து நெடுங்கும்மி
கொட்டுங்கடி!

—'மஹாகவி'



# திரை மறைவில்

## தமிழரசார் நிலை என்ன?

தமிழரசுக்கட்சியின் தடை நீக்கப்பட்டுவிட்டதோடு, அவசரகாலச் சட்டமும் பெரும்பகுதி எடுக்கப்பட்டுவிட்டதல்லவா? தமிழரசுக் கட்சிக்கு இப்போது பெரிய எக்கச்சக்கமான நிலை என்று தெரியவருகிறது. ஒரு வருடத்துக்கு முன்னுல்தான் 'சத்தியாக்கிரக' இயக்கத்தை நடத்தி, பொது மக்களின் அளவுக்கு மீறிய—முன் ஒருபோதும் எந்தக் கட்சியும் கண்டிராத—ஆதரவைப் பெற்றிருந்தது தமிழரசுக் கட்சி. ஆனுல் சென்ற ஒருவருடகால 'செத்த' நிலைக்குப்பிறகு இன்று கட்சியைப்பற்றி பொதுமக்களின் கருத்து எப்படியிருக்கிறதென்பதை சரியாக எடைபோடுவதே தலைவர்களின் முதல் வேலையாக இருக்கிறது. இம்மாதம் 17-ந் திகதி நடைபெறவிருக்கும் 'மாபெரும்' கூட்டங்கள் இதற்கு விடையளித்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மூதூரில் முகமத்தலி?

அவசரகால நிலைமை அகற்றப்பட்டுவிட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உபதேர்தல்கள் விரைவில் நடைபெறப் போகின்றன. நானறிந்தமட்டில் கவர்னர் ஜெனரலின் கெஸட் அறிக்கை பத்துப்பதினைந்து தினங்களுக்குள் வெளியாகக்கூடும். உபதேர்தலுக்கான மூதூர், வெலிமடை, அநுராசபுரம், ஆகிய மூன்று தொகுதிகளுள் மூதூர்த் தொகுதி தமிழர்களுடையது. கடந்த தேர்தலில் தமிழரசுக்கட்சி திரு. ஏகாம்பரத்தை நிறுத்தி வெற்றி கண்ட தொகுதி அது. வரப்போகும் உபதேர்தலில், முன்பு திரு. ஏகாம்பரத்தை எதிர்த்து போட்டியிட்ட ஜனுப் முகமத்தலியே தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடக்கூடுமென்று தெரிகிறது. தமிழரசு முக்கிய தலைவர்களின் ஆதரவு அவர்பக்கமே இருக்கிறதாம். அவரை விட, திரு. நேமிநாதனுடைய பெயரும், செனட்டர் மாணிக்கத்தின் மருமகனுகப்போகிற ஒரு புறக்டரின் பெயருங்கூட அடிபடுகிறதாம்!

## 'லைட்' அணைந்ததேன்?

திரு துரைராசா வெளியேறியதும் காலியான மேயர் பதவிக்குப் போட்டி பலமாக இருக்கும் எனறு யாழ் நகர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் திரு ஜேக்கப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

இது எதிர்பாராத முடிவு ஆயினும் திரு ஜேக்கப்பின் சமீபகால நடவடிக்கைகள் அவர் சிறந்த ஓர் நிர்வாகி என்பதை நிரூபிக்கக்கூடியனவாய் இருந்தன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

திடீரென்று அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்போவதாக அறிவித்தனர் சில அங்கத்தவர்கள். திரு ஜேக்கப், யாழ்—எம். பி. திரு துரையப்பாவின் கையாளாக மாறிவிட்டார் என்பதே அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

தமிழரசுப் பிரமுகர்கள் சிலரின் தலையீட்டுக்குச் சரிந்து கொடுக்காததாலேயே திரு ஜேக்கப்பைப் பழிவாங்க முயலுகிருர்கள் என்பது மற்ருெரு பகுதியாரின் வாதம்.

எது எப்படியாயினும் சென்ற புதன்கிழமை மாலை விவாதிக்கப்படவிருந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டு விட்டது .ஏன்?

அன்று மாலை ஏழு இருபது மணிக்கு -அதாவது பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சிறிது நேரத்தில் 'லைட்' திடீரென அணைந்து விட்டதுதான் கூட்டம் ஒத்திவைக்கப் பட்டமைக்குக் காரணம். இந்த 'லைட்' விவகாரத்துக்கும் பிரேரணைக்கும் ஏதாவது தொடர்பிருக்குமோ என்று திரைமறைவில் சந்தேகிக்கப்படுகிறது.

## கச்சேரியடிப் போராட்டம் எங்கே?

'இ. போ. ச.' பஸ் வண்டிகள் பெரிய விவாதமேடைகளாக விளங்கி வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவ்வாரத்தில் ஒரு நாள்—

"அவசரகாலம் எடுபட்ட உடனே மறுபடியும் போராட்டம் தொடங்கிவிடுமோவென்று வீருப்பு பேசியவர்கள் ஒருவரையும் கச்சேரியடிப் பக்கத்திலேயும் காணவில்லையே!"—இப்படிச் சொல்லிவிட்டு ஒரு வெற்றிச் சிரிப்போடு சுற்றுமுற்றும் பார்த்தார் ஒருவர்.

யாருமே அவருக்குப் பதில் சொல்லுவதாக இல்லை. எதிர்ப் பக்கமாக இரண்டு ஆசனங்களுக்குப் பின்னுலிருந்த ஒருவர்மட்டும் இவர் பார்த்தபோது லேசாகச் சிரித்தார்.

"என்ன தம்பிசிரிக்கிறீர்' போராட்டப் புலிகளெல்லாம் இப்போது பூனைகளாய்ப் போய்விட்டதல்லவா? என்ருர் முதலாமவர்.

சிரித்தவர் ஆறுதலாகச் சொன்னுர்; "வைக்கோல் பட்டடை நாய் என்று சொல்வார்களே; அப்படித்தான்...

"சரியாய்ச் சொன்னீர் தம்பி!" என்ருர் முதலாமவர். தமிழரசாரைத்தான் அப்படிக்குறிப்பிடுகிருரென்று நினைத்துக்கொண்டு,

' அப்படித்தான்........சில பேர் தாங்களும் ஒன்றும் செய்யமாட்டார்கள். ஏதோ முடிந்த மட்டும் தமிழுக்காகப் பாடுபடுகிறவர்களைப் பார்த்துக் குரைத்துக்கொண்டேயிருப்பார்கள்!" என்று இரண்டாமவர் முடித்ததுதான் தாமதம், பல் முழுவதும் ஒரே சிரிப்பொலி! முதலாமவர் வாயை மட்டுமல்ல, கண்களையும் மூடிக்கொண்டார்!

இத்தனைக்கும் அந்த இரண்டாம் பேர்வழியை எனக்குத் தெரியும். அவர் ஒரு தமிழரசுக்கட்சிக்காரரல்ல!

— அம்பலத்துறைவோன்

புகைப்பவர்களுக்கு

திருப்தி தரும் இருவித சிகரெட்டுகள்




★ பிப்ரோக்

எடின்பரோ ★




உங்களுக்காகவே
இங்கிலாந்திலிருந்து
வருவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண விநியோகஸ்தர்:

சி. சின்னத்துரை அன் பிறதர்

39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

'புதினம் கருத்து'

# வாழ்த்துகிறோம்! பாராட்டுகிறோம்!

ஈழத்து இலக்கிய உலகில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது.

இதுவரை என்றுமே நடக்காத நிகழ்ச்சி!

கொழும்புமாநகரிலே எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் இந்த நிகழ்ச்சி நடக்கப்போகிறது.

அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் பொது மாநாட்டைத்தான் குறிப்பிடுகிறோம்.

இருபது வருடங்களுக்கு முன்னால் ஈழத்து எழுத்தாளர்களை விரல் விட்டு எண்ணக்கூடியதாக இருந்தது.

இன்று—

மாபெரும் மாநாடொன்று நடாத்தக்கூடிய அளவுக்கு எழுத்தாளர் கூட்டம் வளர்ந்துவிட்டது!

மிக மகிழ்ச்சிதரும் செய்தி இது.

எழுத்தாளர் கூட்டம் அதிகரித்துள்ளதென்றால், இலக்கியப் படைப்புகளும் அதிகரித்துள்ளன என்பதே கருத்து. ஒரு நாட்டின் சிறப்பை அதன் இலக்கியத்தில் பார்த்துவிடலாம். இன்றைய இலக்கியம் நாளைய மனித சமுதாயத்தை உருவாக்குகிறது.

நாட்டின் எதிர்கால ஆக்கத்தில் முக்கிய பங்குடைய இலக்கியத்துக்கு,—அதைப் படைக்கும் எழுத்தாளர்களுக்கு, பொதுமக்களும் அரசாங்கமும் தகுந்த கௌரவத்தை அளிக்கவேண்டும். அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

மாநாடு ஒரு தூண்டுகோலாக அமையுமென்று கருதுகிறோம்.

இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தமட்டில்—

எழுத்தாளர்களிடையே நிலவும் பல இலக்கியப் பிரச்சினைகளை விவாதிக்கவும், புதிய வழிகளை ஆராயவும், கருத்துக்களைப் பரிமாறவும், அளவளாவவும் இவற்றின் பயனாக எழுத்தாளர்களின் உள்ளத்தில் புதிய இலக்கிய எழுச்சி உண்டாகவும் இம்மாநாடு நிச்சயம் உதவும்.

மாநாடு வெற்றியடையவேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

இம்மாநாட்டை ஒழுங்குசெய்து நடத்தும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைப் பாராட்டுகிறோம்.

# சித்திரையே சிரி...

சித்திரத்துத் தாமரையே
சித்திரைப் பொற்பாவாய்!
இத்தரையில் நீ மலர்ந்தாய்,
இனிய நெஞ்சால் வாழ்த்துகின்றேன்;
முத்திரையைக் காட்டு மெழில்
மூவுலகங் காண்கின்றேன்
புத்தாண்டில் புலர்ந்த வுன்னைப்
புன் சிரிப்பால் ஏத்துகின்றேன்..

● ●

தமிழோ தமிழென்று
தமிழ்ப் பெருமை பேசுபவர்
அமிழ்தென்றும் தேனென்றும்
அளக்கின்றார் ஆனாலும்;
உமி ஊற்றிச் சோர்கின்றார்
உண்மைப் பயன் காணார்;
இமயவரும் வியக்கின்ற
எழிலி! உனைச் சுவைத்தாரோ?

● ●

ஓங்கும் இலக்கியத்துள்
உயர்கம்பன் இளங்கோவும்,
பாங்குடைய சீறாவிற்
பரிமளிக்கும் உமரினையும்;
தாங்கிநின்ற கவித்துவத்தைத்
தங்கமுகப் பேரழகி
ஈங்குனக்குப் பாடுவதில்
ஈந்து விட்டேன் நீ சிரியாய்.

— நாகூர் ஏ. பாவா


## கலைவாணியின் புதிய வெளியீடு!

# தமிழ் மொழிப் பயிற்சி

## DESK WORK IN TAMIL

இந் நூல்களில் பிழையின்றி எழுதல், ஏற்ற சொற்களைத் தெரிதல், சரியான முறையில் அவற்றை பிரயோகித்தல், மரபு வழுவாது வாக்கியம் எழுதுதல், பேசுதல், சொற்பெருக்கம் என்பவற்றிற்காய பயிற்சிகள், ஏற்ற உதாரணங்கள், கதைகள், பாட்டுக்கள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன.

**எழுத்துறுப்பமைய எழுதிப்பழகுவதற்கும் இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன**

**5-ம் வகுப்பு தமிழ் மொழிப் பயிற்சியில்**

**N. P. T. A. & N. C. T. T. A. பரீட்சை பத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.**

மற்றும் விபரங்களுக்கு எழுத வேண்டுகிறோம். எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் பார்வையிடலாம்.

2-ம் வகுப்பு - 1—00
3-ம் ,, - 1—25
4-ம் வகுப்பு - 1—25
5-ம் ,, - 1—80


# கலைவாணி புத்தக நிலையம்

யாழ்ப்பாணம், ... ... கண்டி.

## ஈழத்து எழுத்தாளரிடமிருந்து சில சுவையான தகவல்கள் :

பேட்டி: 'ரமணன்'

# "டொமினிக் ஜீவா"



பிரஞ்சு நாட்டின் நாடகஆசிரியர் மோலியர் தனது பிரசித்திபெற்ற பாத்திரங்களையெல்லாம்பாரிசிலுள்ள சலூன்களில் தான் பொறுக்கியெடுத்தானாம். நான் எழுத்தாளன் என்கின்ற முறையில் வாழ்க்கையில் இருந்து – மனிதர்களிடமிருந்து -ஏராளமாகப்படித்தறிந்திருக்கின்றேன். நான் தொழில்செய்யுமிடத்திற்கு வருகிறவர்கள் ஏராளம் ஏராளமாக எனக்குக் கதை சொல்லி இருக்கின்றார்கள். நூறு புத்தகங்களில் படிப்பதைவிடப் பத்து மனிதர்கள் மனந்திறந்து தங்கள்வரலாறுகளைச் சொல்லக்கேட்பது அதிக பயனுள்ளது:

முற்போக்கு எழுத்தாளர், முற்போக்கு இலக்கியம்என்று கிண்டலாகஒருபிரச்சினைசமீபகாலமாக இலக்கிய உலகில் அடிபடுகின்றதே, அதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

இலக்கியத்தைப்பற்றி-குறிப்பாக எனது துறையான சிறுகதையைப்பற்றிச் சில திட்டவட்டமான கருத்துக்கள் எனக்கு இருக்கின்றன. அவைதான் என்னை உருவாக்கின என்று இன்னும் நம்புகின்றேன்; என்றும் நம்புவேன்: எதிர்காலத்தைத் தவறின்றி ஊகிக்கவும் அதற்கு உதவக் கூடியதுமான ஒரு பார்வை– கண்ணோட்டம்–சிருஷ்டி கர்த்தாவுக்கு இருக்கவேண்டியது மிகமிக அவசியம். ஆனால் அதிர்ஷ்டம், நம்மிடையே இருப்பவர்களில் அநேகருக்கு இதைப் போன்ற கண்ணோட்டம் இல்லவேயில்லை. கலை சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையுமே இவர்கள் மிகவும் பாமர மக்கள் சினிமாப்படம் பார்த்துப் பொழுது போக்கும் மனப்பான்மையோடுதான் அணுகுகின்றார்கள். வெளித்தோற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலைமை இருக்க முடியும் என்பதோ, நிகழ்காலத்திற்கு மாறாக ஒரு எதிர்காலம் எந்த விவகாரத்திற்குமே சாத்தியமானதுதான் என்பதோ இந்தக் கிண்டல் பேர்வழிகளுக்குக் கொஞ்சங்கூடப் புரிவதேயில்லை. கிண்டல் பண்ணுகிறவர்கள் கிண்டல்பண்ணிக்கொண்டே இருக்கட்டும். சரித்திரம் தனது தீர்ப்பை எப்போதோ ஒரு நாள் எழுதத்தான் போகின்றது. பொறுத்திருந்து பார்ப்போமே!

ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலத்தினர் 1000 ரூபா பரிசு தந்தார்களே, அதை என்ன செய்தீர்கள்?

இந்தியா போய் வந்தேன். அதற்குள்ளே யாவும் அடங்கும்.

எழுத்துலகத்தைப் பொறுத்தவரையில் தங்களது தொழிலுக்கும் எழுத்திற்கும் ஏதாவது சம்பந்தமுண்டா?

திரு. எஸ். பொன்னுத்துரை தங்களது நீண்டநாளைய நண்பராமே, அவரும் நீங்களும் எப்படி நண்பர்களானீர்கள்?

அது ஒரு ருசிகரமானகதை. பலவருடங்களுக்குமுன் நான் குட்டி எழுத்தாளனாக இருந்த காலத்தில் வெலிங்டன் தியேட்டர் முன்னால் உள்ள தபால் பெட்டியில்தான் என் கதைகளைப் போஸ்ட் பண்ணுவது வழக்கம். காரணம், அதில் முதன்முதல் போட்ட கதையே பிரசுரமாகியது. அதனால் ஒரு குருட்டு நம்பிக்கை. நான் தபால் போட வரும்பொழுது ஒரு கட்டைக் காற்சட்டைப் பிரமுகரும் தபால்போட வருவார். உப்பிப் பருத்த நீண்ட தபால் உறையைப்பார்த்ததும் நான் அசந்துவிட்டேன். அவரும் அப்படியேதான். 'டேயப்பா! பெரிய எழுத்தாளனுக்கும்' என்று பரஸ்பரம் எண்ணிக்கொள்வோம். இதனால் ஒருவரில் ஒருவர் மானசீகப் பயம். நான் பெட்டியில் போட்டுவிட்டு போகுமட்டும் அவர் பராக்குப் பார்ப்பதுபோல் நேரத்தைக் கடத்துவார். நான் அவரை விடக் குறைந்தவனா, என்ன? நானும் நின்று, நிதானித்து பட விளம்பரச் சுவரொட்டிகளைப் பதின்மூன்றாவது தடவையாக வாசித்து முடிப்பேன். பின்னர் எப்படியோ தபாற் பெட்டியில் கதைகளைச் சேர்த்து விடுவோம். ஒரு நாள் சனிக்கிழமை என்று நினைக்கின்றேன். எங்கள் இருவரையும் நண்பர் இராஜகோபாலன் சந்தியில் அகஸ்மாத்தாகச் சந்தித்தார். அவருக்குப் பொன்னுத்துரையை முன்னரே தெரியும். இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார். அன்று முளைவிட்டது நட்புப் பயிர். நாங்கள் இதயங் கலந்த நண்பர்களானாலும் எழுத்துலக கோட்பாட்டை அடிப்படையாகப் பொறுத்தவரையில் நானும் நண்பர் பொன்னுத்துரையும் இரு துருவங்கள். இரு தத்துவங்களின் பாதையில் வழி நடப்பவர்கள்.

வாழ்க்கையில் ஏதாவது சம்பவங்கள்தான் தங்களை எழுதத்தூண்டியதா? அல்லது எழுத வேண்டுமென்பதற்காகவே எழுதுகின்றீர்களா?

'வில்லூண்டிச் சம்பவம்' என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்குமோ என்னமோ எனக்குத் தெரியாது. பிணத்தைச் சுடலையில் சுடப்போன ஒரு மனிதனைச் சுட்டுக் கொன்றார்கள், சில சாதித் திமிர் பிடித்த கயவர்கள்! அச்சம்பவம் எனக்குத் தார்மீக ஆவேசத்தையே ஏற்படுத்திவிட்டது. என் நெஞ்சப் பரபரப்பு அடங்கி ஒடுங்க நீண்ட நாட்களாகி விட்டன. இந்தப் பதைபதைப்புத்தான் என்னுள் ஒரு ஜீவச்சுடரை ஏற்றி வைத்தது. அத் தார்மீக ஆவேசத்தை சாந்தப்படுத்தக் கையில் பேனாவைப் பிடித்தேன். அதுவே என் எழுத்திற்குத் தூண்டுகோலாயிற்று;

மன்னிக்கவும் தாங்கள் யாரையாவது கதலித்ததுண்டா? காதலில் வெற்றி கிடைத்ததா? அல்லது.........

நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. நேரடியாகவே படு பயங்கரமான காதல் தோல்வியால் ஒரு காலத்தில் மனமுடைந்து போனவன்தான் நான். ஆனால் ஒன்று, இந்தக் காலத்துக் காதல் ஜாம்பவான்களைப் போன்று பொலிடோலிடம் சரண்புகுந்து விடவில்லை. காலம் என் நெஞ்சத்துப் புண்ணை ஆற்றித்தான் விட்டது. ஆனால் அந்தத் தழும்பு... காதலின் தோல்விக்குப் பிறகும் வாழ்க்கை இருக்கின்றது. காதல் வாழ்க்கையின் ஒரு அம்சம். காதலை மட்டுமே வாழ்க்கை என்று நினைப்பது இளமையின் அறியாமை.



### 'காதி'யாக நியமனம்

அகில இலங்கை முஸ்லிம் தலைமை ஆசிரியர் சங்கத்தின் தலைவரான, வெலிகாமத்தைச் சேர்ந்த ஜனாப் ஏ. எச். எம். எம். வெபா அவர்கள் மாத்தறை மாவட்ட 'காதி'யாக நியமனம் செயப் பட்டார்.

முஸ்லிம் மக்களிடையே மிகுந்த கௌரவமும், செல்வாக்குமுள்ள இப்பெரியார் காதியாக நியமிக்கப் பட்டது குறித்து சமீபத்தில் ஒருபாராட்டுவிழா நடைபெற்றது.


## 'மில்க்வைற் நீல சோப்'

ஒன்றே

உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.




### வெளிவருகின்றது!

# ஆட்சி இயல்

உலகில் நடைபெறும் பல வேறு ஆட்சி முறைகள், அவை உருவான விதம், அவற்றால் ஏற்பட்ட பலாபலன்கள் என்பன பற்றியும் அவற்றின் வரலாறுகள் பற்றியும் விளக்கமாக உதாரணங்களுடனும் வாதப் பிரதிவாத முறையில் எல்லோரும் வாசித்து விளங்கக் கூடிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இந் நூலாசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரிப் பிரதம ஆசிரியராயிருந்து இளைப்பாறிய திரு. ச. ஹன்டி பேரின்பநாயகன் அவர்கள் ஆவர். அவரது பரந்துபட்ட அரசியல் அறிவும் சரளமான தமிழ் நடையும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்குப் பெரும் பயன் அளிக்குமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம்

சுன்னாகம்.

# 'பூதந்தேவனார்' அரங்கு

## இலக்கியம் எதற்காக

வாசக நேயர்களுக்குப் பூதந் தேவனாரின் புது வருட வாழ்த்துக்கள். பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டு விடுமுறை தொடங்கிவிட்டது. அதனோடு மகாநாடுகளும், பேச்சுக் கச்சேரிகளும் நடைபெறப்போவதாகத் தினசரிகள் அலறுகின்றன. தலைநகரத்தில் நடைபெறும் திருமுறை மகாநாடு. அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாடு இவற்றையெல்லாம் கண்டு களிக்க ஆசைதான். ஆனால் புது வருடச் செலவே குடும்பத்தை அமுக்கிப் பிடிக்கும்போது பணத்துக்கு எங்கேபோவது? இதுதான் எல்லோரதும் கவலை. வெளியில் வேறு எத்தனை காரணங்களைக் கூறினாலும் உள்ளூர அரிப்பது பணநாதன்தான், எழுத்தாளர் மகாநாட்டில் கவி அரங்கம், கருத்தரங்கம், புத்தகக் கண்காட்சி, புகைப்படக் கண்காட்சி எல்லாம் உண்டு என்று அதனோடு தொடர்பு பட்டவர்கள் கூறுகிறார்கள். அதனோடு ஈழத்தில் பல பாகங்களிலும் சிதறி இருக்கும் எழுத்தாளர்களை ஒருமித்துக் கண்டு அளவளாவவும் நல்ல சந்தர்ப்பமல்லவா? மகாநாட்டின் கருத்தரங்கத்தில் இலக்கியம் எதற்காக என்ற தலைப்பில் பல்வேறு இலக்கியக் கருத்தோட்டமுள்ளவர்களும் பேசுவார்களாம். ஆனால் ஒவ்வொரு எழுத்தாளரும் பத்து நிமிடம் தான் பேசலாம் என வரையறை செய்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை வந்தனம் கூறுவதோடு பத்து கழிந்தாலும் கழியலாம். பிறகு கருத்தை எங்கே கேட்பது? இந்தக் கருத்தரங்கங்களால் இலக்கியம் எதற்காக என்று தீர்மானிக்கவும் முடியாது. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் பிடிப்போர்தொகைதான் இப்போது அதிகம். மற்றவர்கள் சொல்வதிலும் ஏதாவது கருத்திருக்கலாம் என்று எண்ணுவோர் குறைவு. ஆகவே கருத்தரங்கங்கள் வீண் கோபதாபம் ஏற்படச் செய்கின்றனவே ஒழிய வேறொன்றும் செய்யமாட்டா என்பதும் நான் கண்ட முடிபு. அப்படி இதுவும் இராமல், உருப்படியான பிரயோசனம் தரக்கூடியதாக இருக்கவேண்டுமானால் அதில் கலந்துகொள்பவர்கள் நிதானம், பொறுமை, பண்பாடு, கொண்டவர்களாக நடந்துகொள்ளவேண்டும். இதை மகாநாட்டோடு சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து ஆவன செய்யவேண்டுமென்று முன் கூட்டியே கூறி வைக்கிறேன்,

## சொற்செல்வர்களா பொருள் பேசுபவர்களா?

எழுத்தாளர் மகா நாட்டில் நடைபெறப்போகும் பேச்சுக் கச்சேரியை நினைக்கும் போது ஈழத்து மேடைகளை அலங்கரிக்கும் பேச்சுப் புலவர்களைப் பற்றிய சிந்தனை எழுகிறது. பிரசங்கம் என்ற சொல் வடமொழியாய் இருப்பதால் அதை யாரோ ஒரு புண்ணியவான் 'சொற்பொழிவு' என்று ஆக்கிவிட்டார். உண்மையில் இப்போது பேசும் பேச்சாளர்கள் சொல் தான் பொழிகிறார்களே யொழிய பேசப்படும் பொருளைப்பற்றிச் சிந்திப்பதேயில்லை. பேச்சும் எழுத்தும் இப்போது சிறிதுகாலமாகத் தமிழுக்குரிய மென்மை குறைந்து 'தம்' பிடித்து நிற்பது போலவும் சீனவெடி வெடிப்பதுபோலவும் இருக்கிறதை அவதானிக்க முடிகிறது. அப்படிப் பேசுபவர்கள் தான் சொற்செல்வர்களாகப் போற்றவும் படுகிறார்கள். பொருளைப் பற்றிச் சிந்தித்துத் தன்மையான நடையில் தமிழுக்குரிய ஓசையில்—பேசுபவர்கள் 'பத்தாம்பசலி' ஆகி விட்டார்கள். சமீப வெளியீடாக—புதுமுயற்சியாக— ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள்' என்ற நூல் வெளிவந்திருக்கிறது. ஈழத்துச் சிவானந்தன் என்ற இளைஞர் அதை எழுதி வெளியிட்டிருக்கிறார். அதிகம் பெரிய நூல் அல்லாவிடினும் முயற்சி பாராட்டக் கூடியதென்பதில் ஐயமில்லை. அவர்கண்டு, கேட்டு எழுதியுள்ள இருபத்தொருபேர்களில் இரண்டொருவரைத் தவிர்த்து மற்றவர்கள் சொற்செல்வர்கள்தான். என்பதை ஈழத்துப் பொதுமக்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் எடுத்த விஷயத்தைப் பொருளோடு அழகுறப் பேசும் விற்பன்னர்கள் இன்னும் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். கட்சி நோக்கோடு பாராமல் பொது நோக்கோடு பார்த்தால் அவர்களின் சிறப்புத்தெரியவரும். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையோடு பக்கத்தில் எழுதவேண்டியவர்கள் தமிழறிஞர் சு. நடேசபிள்ளை, பொ. கிருஷ்ணன் என்போராவர். அவர்களுடைய பேச்சை சைவசித்தாந்த மகாநாடுகளில் கேட்டவர்கள் இன்றும் நினைவில் வைத்திருப்பர். இன்னும் மட்டக்களப்பு எஸ். பொன்னுத்துரை. டொமிக் ஜீவா இ, வள்ளிநாயகி (குறமகள்) என்போரும் குறிப்பிடக் கூடிய பேச்சாளர்களே. அடுத்த பதிப்பு வெளிவருமானால் இவர்களையும் சேர்த்துக்கொள்ளுவது நல்லது. ஆனால் இப்படியான நூல்களைக் குறை கூறுவது சுலபம், செய்து பார்த்தால்தான் கஷ்டம் விளங்கும். எனவே சிவானந்தனின் முயற்சியை வாழ்த்துகிறேன்.

## என்றும் முதுகிற் கிடான் கவசம்

ஈழத்துச் சொற் செல்வர்களில் முதலாவதாகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைப் போட்டிருப்பது சாலவும் தகும். சந்தர்ப்பத்திற்கேற்ற விதமாக—மேடையறிந்து—விடயங்களைப் பேசுபவர் அவர். ஒரு சமயம்—முப்பது வருடங்களுக்கு முன்—ஒரு கிராமத்துக்கு தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றுக்குப் போயிருந்தார். கூட்டம் தொடங்கியதுதான் தாமதம் சரமாரியாகக் கற்கள் வந்து விழுந்தன. தலைமை வகித்த ஒரு பிராமணக் குருக்களின் பூணூலிலே முதுகுப்பக்கத்திலே ஒரு கல் வந்து விழுந்தது. மேடையில் பேச்சாளராக வந்திருந்தோர் பேசுவதற்கே அஞ்சினர். எல்லோரும் பண்டிதமணியையே பேசுமாறு கெஞ்சினர். அவர் எழுந்தார். மெல்லிய ஓசையோடு தொடங்கினார். ஐந்தாவது நிமிஷத்தில், நான் தேர்தல் பிரசாரத்திற்காக வரவில்லை. இராமாயணம், பாரதம் முதலியவற்றிலிருந்தும் புலவர் வரலாறுகளிலிருந்தும் சில கதைகள் சொல்ல வந்திருக்கிறேன் எனத் தொனியை உயர்த்தி தன் அழகான நடையில் கூறினார். சனங்கள் கதை கேட்க ஆயத்தமாயினர். கல் எறிந்தவர்களும் வந்து உட்கார்ந்தனர். அவர் புகழேந்திப் புலவரையும், ஒட்டக் கூத்தரையும் சபைமுன் நிறுத்தி பாண்டியனையும் சோழனையும் பற்றி வர்ணிக்கவைத்தார். ஒட்டக்கூத்தர் சோழனை வர்ணித்த விதத்தை முகவுரையோடு அழுத்திவிட்டு அவர் பாடிய பாட்டை—"வெற்றி வளவன் விறல் வேந்தர் தம்பிரான் என்றும் முதுகிற் கிடான் கவசம்' என்ற பாட்டை—சபையோருக்குப் பாடிக்காட்டி, 'சோழன் புறமுதுகு காட்டி ஓடாதவன் ஆதலால் ஒருபொழுதும் முதுகுப் பக்கம் கவசம் அணிவதில்லை' என்று ஒட்டக் கூத்தர் பாடியுள்ளார் என்பதைப் படம் பிடித்துக்காட்டினார். அப்பால் புகழேந்திப் புலவர் என்ன கூறினார் தெரியுமா? என்று கேட்டு "வெறியார்கமழ்தொடையன் மீனவன் தன்கை வேல் எறியான் புறங்கொடுக்கின் என்று" என்பதைப் பாடிப் பொருள் விரித்தார். சோழன் முதுகுப் பக்கம் கவசம் அணியாததில் ஒருபுதுமையும் இல்லை. ஏனென்றால் எங்கள் அரசன் பாண்டியன் புறமுதுகு காட்டி ஓடுகிறவர்களுக்கு மேல் ஒருபோதும் வேல் எறிவதில்லை. அப்படியான பண்பாடு உடையவன் எங்கள் மன்னன் என்றார். இவ்வளவோடு பண்டிதமணி கதையை நிறுத்திவிட்டு "நாளைக்கு இதே இடத்தில் எதிர்க்கட்சியினர் கூட்டம் போடப்போவதாக அறிகிறேன். நீங்கள் ஒரு பயமும் இல்லாமல் வந்து அவர்கள் பேச்சைக் கேட்கலாம். ஏனென்றால் தோற்றுப்போகப் போகும் அவர்கள்மேல் கல்லெறிய எங்கள் கட்சி தயாராக இல்லை. நாங்கள் பாண்டியர்கள்" என்றார். கைதட்டல் வானைப் பிளந்தது. கல் எறிந்தவர் நாணித்தலை குனிந்தனர்.

## வேலையில்லை

1. 'எம்பிக்கு'ச் சுளையாக நீட்டிவிட்டால்
தம்பிக்கு வேலை வரும் நாளையுண்மை
நம்பிக்கை இதில்வைக்கத் திராணியற்ற
நம்போன்ற ஏழைகட்கு வேலையில்லை

2, சமுகத்தில் தாழ்ந்தவர்க்குப் பதவியுண்டு
சல்லியுள்ள பேருக்கும் வேலையுண்டு
கல்வியிலே முன்னேறிக் காலமெல்லாம்
காத்திருக்கும் எம்மவர்க்கு வேலையில்லை

3. 'பயிற்சி'யாம் பட்டத்தைச் சூட்டிக்கொண்டு
பண்புள்ள தமிழாசானாகிக் கொண்டு,
'என்பிள்ளை' எனைக்காக்கும் வேலைகொண்டு
என ஏங்கும் தாய்மகற்கு வேலையில்லை

4. அன்னையும் என்செய்வாள் அவளின்கையில்
'ஐந்நூறு' ரூபாய்க்கு எங்கே செல்வாள்?
தின்னவும் ஒருவேளை அன்னமின்றி
திரிகின்ற அவள் மகற்கு வேலையில்லை.

5. அடுப்பறியா துலைப்பானை யருமை
அன்னச் சுவையறியா தவர் வீட்டு அகப்பை,
நெருப்பறியா தவ்வில்லத் தடுப்பு
நிலை இதுவாகக் காரணமென்? வேலையில்லை

— வி. த. குமாரசாமி

காதலில் வெற்றி!

அதுமட்டுமல்ல; எடுத்துக்கொண்ட ஒவ்வொரு கருமத்திலும் வெற்றிதான்! சுத்தமும் சுவையுமுள்ள உணவுவகைகளை உபயோகிப்பதனால் வாழ்க்கையில் பூரண வெற்றிபெறுவீர்கள்!

"சரஸ்வதி மில்" தயாரிப்புகளான

சுத்தமான

குரக்கன்மா, அரிசிமா, கடலைமா.
மிளகாய்த்தூள், கோப்பித்தூள்

ஆதியனவற்றை வாங்கி உபயோகியுங்கள்.

○ உங்களுக்குப் பூரண திருப்தி அளிப்பன!

○ எங்கும் கிடைக்கும்!

முக்கியகுறிப்பு:
வீணை மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சரஸ்வதி மில்
190, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 467

# இத்தால் சகலரும் அறிவது!

## செய்திகளின் சிகரம் 'புதினம்'

'புதினம்' செய்திகளுக்குச் சிகரம் வைத்ததுபோல் அமைந்திருக்கின்றது. அதன் விறுவிறுப்பான தலையங்கங்கள். 'திரைமறைவில்' பகுதி மிகத் துணிச்சலானதும் புரட்சிகரமானதுமாகும். ஊழல்களை அம்பலப் படுத்தும் புதினத்தைப் போற்றுகிறேன்.

தெரணியகல, — ஆர். பத்மா

## கருத்தை வளர்க்கும் சர்ச்சைகள் வேண்டும்

கருத்தை வளர்க்கும் சர்ச்சைகளைப் 'புதினம்' சமீப காலத்தில் கைவிட்டு விட்டதே ஏன்? "காதல் முறிந்தால் துறவா?" என்பது போன்ற கருத்தரங்கை மறுபடியும் எப்போ ஆரம்பிக்கப் போகிறீர்கள்?

திருகோணமலை, — திருமலைராஜ்.

## நடுநிலைமை தவறிவிட்டார்கள்

பெரியகல்லாறு சிரேஷ்ட பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தவர்கள் நடுநிலைமை தவறிவிட்ட துரதிர்ஷ்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. சொந்தப் பாடசாலை ஆசிரியர்களே மத்தியஷ்தராகக் கடமையாற்றினர்கள், பத்துவயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் பெரிய பிள்ளைகள் கலந்து கொள்வதை மத்தியஸ்தர்கள் தெரிந்தும் தெரியாததுபோல் இருந்தார்கள்,

மாவித்தியாலயம் மாபெரும் தவறை இழைத்து விட்டது.

பெரியகல்லாறு, — ஆர். ஜோசெப் கனகலிங்கம்.

## 'தோட்டம்' போடுவீர்களா?

உண்மைக்குப் புறம்பான செய்திகளை என்றுமே வெளியிடாத புதினத்தைப் பாராட்டுகிறேன்: தோட்டப் பகுதி மக்களுக்கும் ஒரு பகுதியை ஒதுக்குவீர்களா?

பாகைத்தோட்டம், தெரணியகல, — ரா. பத்மநாதன்

## பூதந் தேவனர் 'பூங்கா'

'பூதந் தேவனர் அரங்கு' ஒரு இலக்கியப் பூங்கா. இப்பகுதி உள்ளடக்கும் செய்திகளைப் போல் இதுவரை எந்தப் பத்திரிகையும் வெளியிட்டதில்லை.

வெள்ளவத்தை, — வா. குவேனி

## போற்றி, போற்றி!

உடன்தேவையைக் கவனிப்பதற்குப் புதினத்துக்கு நிகர் புதினமேதான். இளம்பிள்ளை வாதம் பரவுகிறது என்றதும் அதைத் தவிர்க்கும் முறையையும் தகுதி வாய்ந்த டாக்டர்களைப் பேட்டிகண்டு வெளியிட்ட புதினத்தின் சேவை மனப்பான்மையைப் போற்ருதார் யாரும் இருக்கமுடியாது.

கொழும்பு-13, — எஸ். பொன்னம்பலம்

ஆடவர்கள், பெண்கள், சிறுபிள்ளைகள்,
அழகான ஆபரணமும் ஆடையும் அணிந்தால்மட்டும்
... திருப்தியடைய முடியாது! ...
அழகான பாதரட்சையும் வேண்டும்!
யாழ்ப்பாண சப்பாத்து மாளிகை
51, கஸ்தூரியார் வீதி, : : யாழ்ப்பாணம்.
அப்படியானல்
யாழ்ப்பாண சப்பாத்து மாளிகைக்கு
விஜயம் செய்து திருப்தியடையுங்கள்.

றப்பர்ஸ்டாம்புகள்
பிளாஸ்டிக் போர்டுகள்
விளம்பர போர்டுகள்
திறப்புக்கோர்வை விலாசங்கள்
குறித்த தவணையில் வேண்டுமா?
எம்மிடம் வாருங்கள்
கலாசோதி இன்டஸ்றீஸ்
141/1, கே. கே. எஸ். வீதி, : : யாழ்ப்பாணம்.

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

15-4-62 முதல் 21-4-62 வரை

மேடம்: தொழிலைப்பொறுத்தவரையில் இம்மாதத்தில் பலமுன்னேற்றமுண்டு. நண்பர்களால் பல உதவிகிட்டும். ஆனல் தேகசுகம் பாதிக்கப்படும். பிரயாசமும் அதிகமாகும்.

இடபம்: செலவினங்கள் அதிகமாகும், புதிய கருமங்கள் தடைப்படும். சகோதரரால் நன்மையுண்டு. விவசாயத்திலும் முன்னேற்றம் காணப்படுகிறது.

மிதுனம்: இதுமிகவும் நல்ல வாரம், அதிக பிரயாசமின்றியே கருமங்கள் கைகூடும். நண்பர்களால் பல உதவிகள் கிட்டும் பூமியாலும் நன்மையுண்டு.

கடகம்: குடும்பச் சூழ்நிலைகள் சிக்கலாக இருக்கும். மனதில் அமைதி நிலவாது. தொழிலில் சிறு முன்னேற்றங் காணப்படுகிறது. பிதாவழி பந்துக்களால் சிறு கஷ்டமுண்டு.

சிங்கம்: தேக சுகவீனம் உண்டு. ஆனல் தொழிலில் முன்னேற்றங் காணப்படுகிறது. சத்துரு ஜயமும், முன் முதலீடு செய்தவற்ருல் லாபமும் உண்டு. கண்ணேய் ஏற்படலாம்.

கன்னி: இந்த வாரத்தில் பல சங்கடங்கள் ஏற்படும். உங்கள் கருமங்கள் பல தடைப்படும். தேக சுகத்தைப் பேணவும். கடுஞ்சுரம், பிணி கண்டு மாற இடமுண்டு.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்தஊர் வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

துலாம்: மாதாவுக்குச் சுகவீனம் உண்டு. உங்கள் தேகசுகமும் பாதிக்கப்படும். ஆனல் தொழில் முன்னேற்றமுண்டு. சத்துரு ஜயமும் ஏற்படும்.

விருச்சிகம்: விவசாயத்தில் முன்னேற்றமுண்டு. உங்கள் வழமையான முயற்சியில் சிறு மாற்றங்கள் நிகழலாம். குடும்பச் சூழ்நிலை திருப்திகரமாக இருக்காது. போட்டிகளில் வெற்றியுண்டு.

தனுசு: நண்பர்களுடன் விரோதங்கள் ஏற்படும். தொழில் ஸ்தாபனத்தில் சங்கடங்களும் ஏற்படலாம். உங்கள் மாதாவின் சுகமும் பாதிக்கப்படும். உங்கள் தேக நிலையும் திருப்திகரமாக இருக்காது.

மகரம்: வாரத்தின் முதலிரண்டு நாட்களையும் அவதானமாகக் கழிக்கவும். உங்கள் சொந்த விஷயங்களில் சிக்கல் அதிகமாகும். மனதிலும்அமைதிநிலவாது. பொருள் விருத்தியுண்டு.

கும்பம்: வாரத்தின் முதலிரண்டு நாட்களும் நன்மையைக் கொடுக்கும். செவ்வாய், புதன், வியாழக் கிழமைகளை அவதானமாகக் கழிக்கவும். வெள்ளி, சனி வாரங்களில் மறுபடியும் முன்னேற்றமுண்டு.

மீனம்: வார முற்பகுதியில் தொழிலில் முன்னேற்றமுண்டு. ஆனல் தேகசுகம் மட்டும் பாதிக்கப்படும். வியாழன் பிற்பகல், வெள்ளி, சனி வாரங்களை அவதானமாகக் கழிக்கவும்.

இப்பொழுது
சிறந்த நாகரிகச் சின்னம்
இந்திய
கைத்தறிச் சேலைகளே!
சிறந்த இனங்களைத் தெரிவு செய்ய
இன்றே விஜயம் செய்யுங்கள்
ரொலறம்ஸ்
46, மெயின் ஸ்றீற் யாழ்ப்பாணம்.

# ஸ்ரீதரின் அரிய சாதனை!

## சினிமா உலகில் புரட்சி!

'இளம் கன்று பயமறியாது' என்பார்கள். பயம் இல்லாதவன் என்ருல் துணிச்சல் மிக்கவன் என்றுதானே பொருள்? நாட்டுக்கு மட்டுமல்ல சினிமா உலகுக்கும் அவ்வித துணிச்சல் மிக்கவர்கள் தான் தேவை.


ஸ்ரீதரைத்தான் குறிப்பிடுகிறேம். பட உலகில் புரட்சியை உண்டுபண்ண வேண்டும் என்று அந்த இளம் இதயம் சதா கற்பனை செய்து கொண்டிருக்கிறது. 'தேன்நிலவு எதிர் பார்த்த அளவு வெற்றியைக் கொடுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனுல் அந்தத் தோல்வி ஸ்ரீதரின் புதுமைக் கருத்துக்களை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. மறுநிமிடமே, '20 நாட்களில் ஓரே செட்டில் ஒரு படத்தை முடிக்கப் போகிறேன்' என்று அவர் அறிவித்தார். இவரது துணிச்சலை மற்றப் படாதிபதிகள் அசட்டுத் தைரியம் என்ருர்கள்.

ஆனுலும் இந்த 'இளங்கன்று' தன்னுடைய காரியத்தைச் சாதித்தே விட்டது!

ஆமாம்; சொன்ன சொல்லை நிரூபித்துக் காட்டினுர் ஸ்ரீதர். நெஞ்சில் ஓர் ஆலயம்' உருவாகியது. ஸ்ரீதருக்கு மாபெரும் வெற்றி. இதில் இன்னெரு முக்கிய விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இப்படத்தில் நட்சத்திர நடிகர்கள் நடிக்கவில்லை. ஒரு படம் வெற்றியடைவதற்கு நட்சத்திர நடிகர்கள்தான் காரணம் என்ற கூற்றை இவர் முறியடித்திருக்கிருர்.

''ஓரே செட்டில் 28 நாட்களுக்குள் இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் இப்படி ஒரு படம் எடுக்கப்பட்டதே இல்லை. இந்த வெற்றி ஸ்ரீதருக்கு மட்டும் சொந்தமானதல்ல படாதிபதிகள் அனைவருக்குமே சொந்தமானது'' என்றுபிரபலபடாதிபதி ஏவி மெய்யப்பச் செட்டியார் கூறுகிருர்.

வட இந்தியாவில் பிரபல தயாரிப்பாளராக விளங்கும் பி. ஆர். சோப்ரா பாட்டுக்கள் இல்லாமல் ஒருபடத்தைத் தயாரித்து வெளியிட்டார். ஆனுல் இந்தச் சோதனையின் முடிவு என்னவாகுமோ என்று பயந்து அவர் தமது படத்தில் பிரபல நடிகர்களை நடிக்க வைத்தார். அதோடு ரஷ்யாவின் புகழ் பெற்ற ஒரு நாட்டியக்காரியையும் வரவழைத்துத் தமது படத்தில் ஆட வைத்தார். ஆனுல் ஸ்ரீதர் அவரை விட ஒருபடி மேலே போய் விட்டார் என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது.



கண்ணின் கவர்ச்சி கருத்தைத் திண்டி விட்டால் மண்ணையும் வெல்லலாம்; விண்ணையும் சாடலாம்!

## படித்தவர் மட்டுமே படம் பார்க்கலாம்!

ஸ்பெயின் நாட்டின் மிகச் சிறியதொரு எல்லைப்புறக் கிராமமான சாந்த மேரியாவில் சினிமா பார்ப்போர் எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டுமெனத் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது!

சினிமா பார்க்கச் செல்வதற்கு முன்பு ஒவ்வொருவரும் ஒரு பத்திரத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதாவது, அந்தப் பத்திரத்தில் எழுதப் படிக்கத் தெரியுமா? என்ற கேள்வியிருக்கும்! இதன்படி எழுதப் படிக்கத் தெரிந்தோர் மட்டுமே படம் பார்க்க அனுமதிக்கப் படுவார்கள்! இந்த உத்தரவை மேயர் ஜோஸ்கிடிமால்டி பிறப்பித்துள்ளார்.

இதற்குக் காரணம், சென்ற வருடம் டிசம்பர் மாதத்தில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரப்படி, தேசத்தில் பத்து சதவிகித மக்கள் ( 30 லட்சம்பேர் ) எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்பது தெரியவந்ததேயாகும்.

மேயரின் உத்தரவுப்படி கல்வியறிவில்லாதோர் சினிமா பார்க்கும்நேரத்தில் மாலை வகுப்புகளுக்கு அனுப்பப்படுவார்கள்.

## பாசம் வளர்கிறது!

ஆர். ஆர் பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'பாசம்' துரிதமாக வளர்ந்து வருகிறது!

எம். ஜி. ராமச் சந்திரன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, டி. ஆர். ராஜகுமாரி, எஸ். ஏ. அசோகன், கல்யாண்குமார், டி. ஆர். இராமச்சந்திரன் ஆகியோருடன், ஷீலா என்ற புதுமுகமும் நடித்து வருகிருர்.

இப்படத்தின் திரைக்கதை வசனத்தை துறையூர் மூர்த்தியும், பாடல்களைக் கவிஞர் கண்ணதாசனும் எழுதியிருக்கிருர்கள். விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைக்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர். ராமண்ணு டைரக்ட் செய்கிருர்.

## நட்சத்திரக்குவியல்

கல்பனு கலாமந்தீர், பிரபல நட்சத்திரங்கள் பலரைக் கொண்ட ஒருபடத்தைத் தயாக்கத் தீர்மானித் திருக்கிருர்கள். இப்படத்தில் சிவாஜி, ஜெமினி, சாவித்திரிஎம். ஆர். ராதா, தங்கவேலுசுப்பையா, சௌகார்ஜானகி, கண்ணும்பா ஆகியோர் நடிப்பார்களாம் திரைக்கதை வசனத்தை சக்தி கிருஷ்ணசாமி எழுதுவார், ஆர். ஆர்சந்திரன் படத்தை டைரக்ட்செய்வார்.

## இரு 'மஞ்சரி'கள்

அஞ்சலி பிக்சர் 'ஸ்வர்ண மஞ்சரி' என்ற பெயரில் ஒருபடத்தை தயாரித்து வருகின்றனர். இப்படம் தமிழிலும், தெலுங்கிலும் தயாரிக்கப் பட்டு வருகிறது. இவ்விரண்டு மொழிகளிலும் உருவாகும் படத்தில் அஞ்சலி தேவியே கதா நாயகியாக நடித்து வருகிருர்.

தமிழ்ப் படத்தில் ஜெமினி கணேசனும், எம். ஆர். ராதாவும் முக்கிய பாகமேற்று நடிக்கின்றனர். தஞ்சை ராமையா தாஸ் வசனம் எழுதும் இப்படத்தை, வேதாந்தம் ராகவையா டைரக்ட் செய்கிருர். ஆதி நாராயணராவ் இசையமைக்கிருர்.

அதே நேரத்தில், புதிதாக நிறுவப்பட்டுள்ள ஜயன் பிக்சர்ஸ் என்ற கம்பனியார், ''இரத்தின மஞ்சரீ'' என்ற மற்ருெரு படத்தையும் தயாரித்து வவுகின்றனர்!

## 'தென்றல் வீசும்'

வீக்கிரம புரடக்ஷன்ஸாரின் 'தென்றல் வீசும்' ஏப்பிரலில் வெளிவருகிறது. இப்படத்தை திரு. பி. எஸ் ரெங்கா தயாரித்து வெளியிடுகிருர். கிருஷ்ணகுமாரி, கல்யாணகுமார், எம். ஆர். ராதா, ராமராவ், கருணுநிதி ஆகியோர் நடிக்கிருர்கள்.

## தமிழ் சினிமா உலகம் பின் தங்கி விட்டதேன்?

''தமிழ்ப்படத்துக்குப் போகவே எனக்குப் பிடிக்காது'' என்று ஒருவர் கூறினுல் அவர் மீது ஆத்திரப்படுவதில் அர்த்தமே இல்லை.

ஒருவர் ஆங்கிலப்படங்களை விரும்பிப் பார்ப்பதற்கு அவைகளில் விரசமான கட்டங்கள் மலிந்திருப்பதே காரணம் என்று சிலர் கூறுகிருர்கள். அதை முற்றிலும் உண்மை என்று ஒப்புக்கொள்ள முடியாது. இயற்கை அம்சங்கள் நிறைந்திருப்பதாலேயே ஆங்கிலப்படங்கள் ரசிகர்கள் மத்தியில் பெருமிடத்தைத் பற்றிக்கொண்டிருக்கின்றன. அதோடு படத்தயாரிப்பாளர்கள் சிறுகதை ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு படத்தை அற்புதமாகச் சிருஷ்டித்து வெளியிடுகிருர்கள்.

தமிழ்ப் படத்தயாரிப்பாளர்களுக்கு இந்த உண்மை தெரியாததல்ல. ஆனுல் அவர்கள் புதுமையைப் புகுத்தத் துணிவதில்லை. போட்ட முதல் திரும்பிவரவேண்டுமே என்ற அச்சத்தில் அவர்கள் பழையபாதையிலேயே சென்றுகொண்டிருக்கின்றனர்.

சினிமா சம்பந்தப்பட்டவரை நாம் இருபத்தைந்து வருடங்கள் பின் தங்கியுள்ளோம் என்பதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

கத்தியால் குத்தப்பட்ட ஒருவன் ''ஐயோ நான் செத்தேன்'' என்று ஒரு மணி நேரம் பக்கவாத்திய சகிதம் முழங்கிவிட்டுச் செத்து விழும் காட்சியைக் கூட 'ஆகா அபாரம்' என்று ஒரு காலத்தில் மக்கள் ரசிக்கத்தான் செய்தார்கள். இன்று அவ்வித காட்சிகளை இயற்கைக்கு முரணுனது என்று நாம் ஒதுக்கித்தள்ளிவிட்டோம்.

ஆனுல்—

இப்போதய படங்கள் மட்டும் ஒன்றும் வாழ்ந்துவிடவில்லை. வீதியில் ஆமை வேகத்தில் மோட்டாரைச் செலுத்தியபடி சங்கீதக் கச்சேரி செய்வதும் காதல் கட்டத்தில் மரத்தைச் சுற்றி ஓடுவதும், காதலனும் காதலியும் மாறி மாறி இயற்கைக் கவிகள் போல் அயம் பாடுவதும் இன்னும் தமிழ்ப்பட உலகைவிட்டு அகலவில்லை.

ஒரு சமூகப்படத்தில் பாட்டுக்களைப் புகுத்துவது இயற்கைக்கு முரணுனது. காதலர்கள் பாட்டினுல்தான் சாதாரண வாழ்க்கையில் பேசிக்கொள்வார்களா? இல்லையானுல் படத்தில் மட்டும் ஏன் அப்படி இருக்கவேண்டும்? பழமையைக்களைந்துவிட்டு இயற்கை உலகுக்கு இறங்கிவர நம் படாதிபதிகளுக்குத் துணிச்சல் இல்லாமையே அதற்குக் காரணம்.

''நந்தினி''



# இன்று நீ வாழ்ந்திருந்தால்...

"வரதர்"

என் பிரிய தோழி, முல்லை! இன்று உன்னுடைய நினைவு தினம். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இதே மாதம் இதே நாளில் இந்த உலகத்தை விட்டு நீ பிரிந்தாய்; எவ்வளவு துன்பமான பிரிவு! இந்த உலகில் வாழ விரும்பாமல் நீயாக விரும்பித்தான் விஷத்தைக் குடித்தாய். ஆனால் குடித்தபின்......

ஐயோ, ஐயோ,......நீ துடித்த துடிப்பு!...ஆஸ்பத்திரியில் எப்படியாவது உன்னைக் காப்பாற்றி விடமாட்டார்களா என்று நீ கொண்ட ஆசை! வேதனைச் சகதியிலே கொஞ்சம்கொஞ்சமாக நீ அமுங்கிக்கடைசியில்...அப்படி நீ கிடந்து அமுங்குவதைக் காட்டிலும் செத்துப் போவதே நல்லதென்று தோன்றிற்று ...முல்லை, அன்று நீ பட்ட பாட்டைப் பார்த்தவர்கள் என்னதான் துயரம் வந்த போதிலும் 'தற்கொலை' செய்ய மட்டும் எண்ண மாட்டார்கள்; உன்னுடைய அனுபவம் அத்தனை கொடியது!

நீ போய்விட்டாய். உனக்குப் பிறகு மூன்று ஆண்டுகளும் போய் விட்டன! இன்று நீ வாழ்ந்திருந்தால்—

பேதைப் பெண்ணே, உன்னுடைய உயிரை நீ மாய்த்துக் கொண்டது எவ்வளவு முட்டாள்தனமானதென யாரும் எடுத்துக் காட்டாமலே நீ அறிந்து கொள்வாய்!

ஐந்தாறு ஆண்டுகளின் முன்னால் எங்கள் மகளிர் கல்லூரி விடுதிக்கு நீயும் வந்து சேர்ந்த போது,— அன்று தானே உன்னை முதன் முதலாக நான் பார்த்தேன். அடியம்மா, நீ எவ்வளவு அழகாக இருந்தாய்! நீ வரும் வரைக்கும் அந்தக் கல்லூரிக்கே நான் தான் 'அழகு ராணி' யாக இருந்தேன். அதனால் உன்னைக் கண்டதும் எனக்குச் சற்றுப் பொறாமையாகக் கூட இருந்தது. ஆனால் உன்னோடு பழக ஆரம்பித்ததும்—

முல்லை, நீ தங்கமடி! உன்னுடைய அழகுக்கும், குணத்துக்கும், பண்புக்கும்—நான் ஒரு வாலிபனாக இருந்திருந்தால் நிச்சயமாக உன்னைக் காதலித்திருப்பேன்! ஆனால், நீ என்னைக்காதலிக்க மாட்டாய்; நீ தான் உன்னுடைய உள்ளத்தில் அன்பழகனை குடியிருத்தி விட்டாயே!

உனக்கு ஏற்றவர்தான் அன்பழகன். நீ அவரை அறியுமுன்னரே நான்அறிவேன். ஏனென்றால் அவர் எங்கள் ஊரவர்! எனக்கு தூரத்து உறவினருங்கூட! ஆனாலும் என்ன திறமையடி உனக்கு! கிட்ட இருந்தும்; உறவினராக இருந்தும் எனக்கு அகப்படாத அவர், எங்கேயோ பத்துமைல் தூரத்துக்கு அப்பாலுள்ள கிராமத்திலிருந்த உன்னிடம் அகப்பட்டுவிட்டாரே! நியாயப்படி—புராணங்கள், சரித்திரங்கள், நாவல்கள், சிறுகதைகளின் போக்குப்படி பார்த்தால் நீ என்னுடைய எதிரியாக—'வில்லி'யாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் என்ன மாயமோ, உன்னை என்னால் வெறுக்க முடியவில்லை. அன்பழகன் மீது எனக்குஅப்படியொன்றும் 'காதல்' இல்லாவிட்டாலும், அவர் மீது ஒரு நல்லபிப்பிராயம் இருந்தது. உன்னுடைய காதலராகஅவர்அமைந்ததுபற்றியும், அவருடைய காதலியாக நீஅமைந்தது பற்றியும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான் ஏற்பட்டது!

கல்லூரி விடுதியில் நீயும் நானும் தனியாகஎங்காவது ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டுஉன்னுடையகாதலைப்பற்றி எவ்வளவு கதைகள் பேசியிருப்போம்! மணிக்கணக்காக நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்போம்! அன்பழகன் உனக்கு எழுதிய அஞ்சலை என்னிடம் படிக்கத் தந்துவிட்டு, பக்கத்தில் நீ என் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பாய். நான் படிக்கும்போது சுவராஸ்யமான இடங்களில் உன்னை நிமிர்ந்து பார்த்துச் சிரிப்பேனே, அப்போது உன்னுடைய முகத்தில் தோன்றும் நாணமும் இன்பப் பூரிப்பும்–என் தோழி, அந்த அழகை இனி எப்போது, யாரிடம் காணப் போகிறேன்! இன்று நீ வாழ்ந்திருந்தால்!........

ஒரு நாள்—

அப்போது கல்லூரியிலிருந்து நீ படிப்பை நிறுத்தி விட்டாய். நானும் நிறுத்திவிட்டேன். அன்று நீ என் வீட்டிற்கு வந்தாய். உன்னைப் பார்த்ததுமே என் மனம் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தது. ஆனால், முல்லை! உன் முகத்தைப் பார்த்ததும் என் உற்சாகமெல்லாம் ஓடி மறைந்து விட்டது! நீ, நீயாகஇல்லை. ஒரு வாரத்துக்கு முன்பு தான் உன்னைப் பார்த்தேனே; அதற்குள்ளாகவா இப்படி உருக்குலைந்துபோனாய்? உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?

உன் கையைப் பிடித்து என்னுடைய அறையினுள் அழைத்துக்கொண்டு போனேன். உள்ளே போனதும் நீ விம்மி விம்மி அழத்தொடங்கிவிட்டாய். நீ அழுவதைப் பார்க்க எனக்கும் அழுகை வந்து விட்டது. நானும் அழுதேன்.

உன்னுடையநெஞ்சிலே ஏற்பட்ட வெடிப்பை நீ சொன்னாய்.

உன் பெற்றோர்கள் உனக்குத் திருமணம் செய்ய முனைந்ததையும், நீ உன்னுடைய காதல் விவகாரத்தை அவர்களிடம் வெளியிட்டதையும்அன்பழகனுடைய 'குலம் கோத்திர'த்தை விசாரித்த உனது தகப்பனார், 'இந்தக் கல்யாணம் நடக்காது;அவனை மறந்து விடு' என்று சொன்னதையும் விக்கிவிக்கிச் சொன்னாய்!

'நான் எப்படி மறப்பேன், எப்படி மறப்பேன்?... வேண்டுமானால் இந்த உலகையே மறந்துவிடுறேன்' என்று நீ என்னிடம் சொன்னாய். உன்னுடைய தகப்பனாருடைய குணம் எனக்கும் தெரிந்ததுதான். அவர் ஒன்றைச் சொல்லிவிட்டால் அதற்கு 'அப்பீ'லே கிடையாது. ஆனாலும் உனக்கு சமாதானங்கள் சொன்னேன்.

அன்பழகனை உடனே பார்க்க வேண்டுமென்று நீவிரும்பினாய். நல்ல வேளையாக அன்று எங்கள் வீட்டில் நான் மட்டுமே இருந்தேன். பக்கத்து வீட்டுச் சிறுமி ஒருத்தியிடம் அன்பழகனுக்குக் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அவரும் ஓடோடி வந்தார்.

உங்களிருவரையும் பேசிக் கொண்டிருக்கும்படி விட்டு விட்டு, நான் வெளியே படபடக்கும் நெஞ்சோடு காவலிருந்தேன்.

வெகு நேரத்துக்குப் பிறகு நீங்கள் வெளியே வந்தீர்கள். அன்பழகன் பிரிய மனமில்லாமல் பிரிந்துசென்றார்.

நீ அழவில்லை... ஆனால் உன்னுடைய நெஞ்சின் விறைப்பு முகத்திலே தெரிந்தது. எனக்குப் பயமாக இருந்தது. நீ அழுதால்கூட பரவாயில்லையென்று தோன்றியது.

நீ சொன்னாய்: "நான் விரும்பினால் என்னை 'எங்கேயாவது' அழைத்துக் கொண்டு போய்விடுவதாக அவர் சொல்கிறார். ஆனால் அதிலுள்ள கஷ்டங்களையும் அவரே சொகிறார். 'இன்னும் பொறுத்திருந்து பார்க்கலாம்; உன் தகப்பனாரின் மனத்தை மாற்ற முயற்சிக்கலாம்' என்று அவர் சொல்கிறார்...... மெய்தான் 'ஓடிப்போய்' விடுவதனால் எவ்வளவோ தொந்தரவுகள் ஏற்படும், எனக்கு மட்டுமல்ல, அவருக்குந்தான்!..... ஆனால் என்னுடைய தகப்பனாருடைய குணம்......"

எனக்குத் தெரியும், 'கருங்கல்லை உருக்கி விடலாம்; உன் தகப்பனார் மனத்தை மாற்ற முடியாது. ......ஆனால், முல்லை! உன் தகப்பனார் சொன்னபடி நீ அன்பழகனை மறந்துவிட்டாலென்ன? கடினந்தான்; ஆனாலும் முடியாததல்ல. நீ வாழ வேண்டும், உன் பிற்கால வாழ்க்கை நன்றாக அமையவேண்டும், அதற்காக நீ உன்னுடைய இந்தக் காதலை மறந்துவிடு!' என்று சொல்ல நான் விரும்பினேன். ஆனால் நான் சொல்லவில்லை. உன்னுடைய மனநிலையில் அந்த வார்த்தைகளுக்குப் பலன் கிடையாதென்று எனக்குத் தெரியும்......

✠ ✠

இது நடந்த மூன்றாவது நாள் உன்னுடைய கடிதம் எனக்கு வந்தது. "அவரில்லாமல் என்னால் வாழ முடியாது. ஏதோ ஒரு நூலளவுவித்தியாசத்தில் தம்மைப் பெரிய சாதி என்று கருதும் எனது தகப்பனார் என்னுடைய காதலை அனுமதிக்கப்போவதுமில்லை. தோழி, எனக்கு வேறு முடிவும் இல்லை......" என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தாய். அந்தக்கடிதத்தை நான் படித்துமுடிக்கு முன்னரே உன்னுடைய 'முடி'வையும் அறிந்துவிட்டேன் முல்லை, அறிந்துவிட்டேன்!......

✠ ✠

என்ன காரியம் செய்தாய் என் தோழி?

'காதல்' என்பது மறக்க முடியாத–மாற்ற முடியாத ஒரு சக்தி என்று நினைத்திருந்தாயே,–அப்படி நினைத்து, துடிக்கத்துடிக்க உன்னுடைய உயிரை நீயே கொலை செய்தாயே! இன்று நீ வாழ்ந்திருந்தால்?— உன்னை உயிருக்குயிராகக் காதலித்த அன்பழகன், இன்று வேறொரு பெண்ணை திருமணம் செய்து இன்பமாக வாழ்வதை நீ தெரிந்துகொள்வாய்! அதுமட்டுமல்ல; அந்தப் பெண்ணை— தனது புதிய மனைவியை அவர் நெஞ்சாரக் காதலிப்பதையும் தெரிந்து கொள்வாய்!

அவர் அவளை நெஞ்சாரக் காதலிக்கும் விஷயம் எனக்கு அவ்வளவு நிச்சயமாக எப்படித் தெரியுமென்று நினைக்கிறாய்?

என் அருமைத் தோழி—

என்னை மன்னித்துவிடு.

அவருடைய அந்தப் புதிய மனைவி—

நான்தான்! ●

# இனிய கனிக்கு வலிய தோல்



எல்லோரும்தான் கல்யாணம் செய்கிறார்கள். எனவே, அவனும் கல்யாணம் செய்தான் அவளை.

காதற் கல்யாணமல்ல அது; பெற்றோர் பார்த்துச் செய்து வைத்ததுதான்.

அவன் தன்னை இராமன் என்றோ இராவணன் என்றோ எண்ணவுமில்லை; ஒரு சீதையோ மண்டோதரியோ மனைவியாக வாய்க்க வேண்டுமென்று எதிர்பார்க்கவுமில்லை.

அவன் சாமான்ய மனிதன்தானே! ஒரு சாதாரண மனைவியையே அவன் விரும்பினான்.

ஆனால் அவனுக்கு வாய்த்தவள்? உவமான உவமேயத்திற்கு அப்பாற்பட்டவளாகஇருந்தாள். கதையில்வரும் அடங்காப்பிடாரியும்,கற்பனையில் காணும் பத்திரகாளியும் கூட அவளுக்கு உவமையாகமாட்டார்கள். புற அழகு இல்லாமலில்லை; அக அழகுதான் பூஜ்யம்.

கல்யாணமான மூன்றாம் நாளே அவளுடைய சுயரூபம் தெரிந்துவிட்டது. தெரிந்தென்ன பிரயோசனம்? கடையில் வாங்கும் செருப்பா, காலைக் கடித்தால் கழற்றித் தூர வீச?

'தாரமும் குருவும் தலைவிதிப்படி' என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அதில் தஞ்சம் புகுந்துகொண்டு தன்னைத் தேற்றிக்கொண்டான்.

அவன் படித்திருந்தான். ஆனால் கற்ற கல்வியை முதலாக வைத்து அவன் வியாபாரம் எதுவும் செய்யவில்லை. அதற்கு அவசியமுமிருக்கவில்லை. பிதிரார்ஜித சொத்து சுமாராக இருந்தது. அதை வைத்துக்கொண்டு காலட்சேபம் நடத்தினான். குந்தியிருந்து சாப்பிட்டாலும் அந்தச் சொத்து மூன்று தலைமுறைக்குப் போதும்.

அவன் எளிய வாழ்க்கைப் பிரியன். வீண் ஆடம்பரங்களை வெறுப்பவன். அவள் அதற்கு எதிர்மாறு. கொஞ்சம் படித்திருந்த கர்வம் வேறு. அவனுடைய அறிவை, ஆற்றலை, அந்தஸ்தை, ஏன் நாகரீகத்தைக்கூட குறைத்தே எடை போட்டாள்.

அவன் 'காகம் கறுப்பு' என்றால், 'இல்லை வெள்ளை' என்பாள் அவள். அவன் வெண்டைக்காய் வாங்கி வந்தால், சுண்டைக்காய்தான் வேணுமென்பாள். அவன் சினிமாவுக்கு வரச் சொல்லி அழைப்பான், அவள் பீச்சுக்குபோகவேணுமென்று நிற்பாள். அவன் பேப்பர் வாசித்துக்கொண்டிருந்தால், அவள் கோப்பிரேட்டிவ் கடைக்கு போகச் சொல்லுவாள். அவன் வடதுருவமென்றால்,அவள் தென் துருவம். இருவருக்கும் ஒருநாளும் ஒத்து வராது.

முன்னொருநாள்—

புத்தி சொல்லி அவளைத் திருத்த எண்ணினான், அவன். "பேதமை என்பதுமாதர்க் கணிகலம் என்று படித்திருக்கிறாயோ?" என்றுகேட்டான்.

"ஔவையின் ஆத்திசூடிதானே! அதிலேயே இன்னாரிடத்தில், 'பெண் சொற் கேளேல்' என்று சொல்லியும் இருக்கிறார் தானே!"

"ஆகவே அது ஔவை கூறியதைக் கேட்கவேண்டியதில்லை என்பதுதான் உன் வாதமோ? பெண் என்பது அங்கு மனைவியைக் குறிக்கின்றதேயன்றி ஏனைய பெண்களைக் குறிக்கவில்லை; பெண் சொல் என்பது தலையணை மந்திரமாகும்."

"இதுதான் உங்களுடைய வியாக்கியானமோ? நான் ஏதும் சொன்னால் 'பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்' என்பீர்கள், அப்படித்தானே?"

இந்த ரீதியில் அவர்களின் விவாதம் வளர்ந்து அவள், 'கன்னா பின்னா' என்று பேசும் கட்டத்தில் போய் நின்றது.

அவள் 'போடா வாடா போக்கிரிப் பயலே' என்று சொல்வதற்கு இடம் வைக்காமல் எழுந்துபோய்விட்டான். அன்றிரவு முழுவதும் அவன் தனது தலைவிதியை நொந்து அழுதழுது தலையணையை ஈரமாக்கினான். அதற்குப் பிறகு அவளுக்கு புத்தி புகட்ட நினைப்பதில்லை அவன்.

இன்னொருநாள்—

அவள் 'நாக்கை நீட்டினாள்.' அவன் கையையே நீட்டிவிட்டான். அடித்தாலாவது அவள் அடங்கமாட்டாளா என்ற எண்ணத்தில் 'பளார், பளார்' என்று கன்னத்தில் இரண்டு வைத்தான்.

அவள் எரிமலையாகக் கிளம்பிவிட்டாள். பொலிடோல் குடித்து தற்கொலை செய்ய முயன்றாள். தக்க தருணத்தில் அவன் பாய்ந்துஅதைப் பிடுங்கிப் பறித்து வீசிவிட்டான். நல்ல காலம், அவளுடைய உயிரும் அவனுடைய கௌரவமும் தப்பிப் பிழைத்தன. அதற்குப் பிறகு அவள் அந்தமாதிரி விஷப் பரீட்சையில் இறங்குவதில்லை.

வேறொருநாள்-

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் மனஸ்தாபம்தான். சாப்பிடாதிருந்தாலாவது அவள் வழிக்கு வருவாளென்ற எண்ணத்தில் அவன் ஒரு நேரம்

## "மாயாவி"

பட்டினி கிடந்தான். வந்தது வினை.

அவள் ஒருநாள் பூராவுமே உண்ணாவிரதமிருந்தாள்.

அவன் போய் 'கண்ணே! பொன்னே! கற்பூரமே! கற்கண்டே!' என்று அவளைக் கெஞ்சி மன்றாடிச் சமாதானப்படுத்திச் சாப்பிடப்பண்ண வேண்டியதாயிற்று.

அவர்கள் வாழ்க்கையில் இப்படி இன்னும் எத்தனையோ நாட்கள்.

அவள் அவளாகவே இருந்தாள்; அவனுடைய வழிக்கு வரவேயில்லை. காட்டில் நடக்கவேண்டுமானால் காட்டை வெட்டித் திருத்தி வீதியமைக்க முயலாது. காலுக்குச் செருப்புத் தைத்துப் போட்டுக்கொள்வதே புத்தி என்பதை உணர்ந்து, அவளை அவளுடைய வழியில் விட்டுத் தானும் தன் வழியில் சென்றான், அவன். அதாவது பெண்டாட்டி தாசனாக வாழ்ந்து வந்தான்.

இப்படியிருக்கையில் அவனுக்கு ஒரு கொடியநோய் உண்டாயிற்று. அந்தநோய் வரவேண்டுமென்று காத்திருந்தவன்போல் அவன் மகிழ்ந்தான். அவள் டாக்டர்களை அழைத்துக் காட்டினாள். அவர்கள் பார்த்துவிட்டு, 'ஆப்பரேஷன்' செய்யவேண்டுமென்றார்கள். அவன் ஆஸ்பத்திரிக்குப் போக மறுத்துவிட்டான். அன்றைவரை மனைவி ஆட்டுவிக்க ஆடியவன் அவனுக்கு வந்த நோய்விஷயத்தில் தனது விருப்பப்படி நடந்தேதீருவதென்று சாதித்தான்.

"நான் வாழ்ந்து குப்பை கொட்டியது போதும். மரணம், வாயிற் கதவைத் தட்டுகிறது. நான் அதை வரவேற்கிறேன். ஆஸ்பத்திரிக்குச் செல்லவோ ஆப்பரேஷன் செய்துகொள்ளவோ நான் சம்மதிக்கப்போவதில்லை" என்று பிடிவாதமாகக் கூறினான்.

அவனுடைய சம்மதமில்லாமல் ஆப்பரேஷன் செய்யமுடியாதாகையால் டாக்டர்கள் வேறு வழியின்றி மருந்தை ஊற்றிக் கொடுத்தார்கள். அதைக்கூட அவன் விரும்பிய போது குடித்தான்; விரும்பாதபோது கீழே கொட்டினான். தான் சாக மருந்து குடிப்பவனை எந்த வைத்தியன்தான் சொஸ்தப்படுத்த முடியும்?

அவள் சோகமேஉருவாக அமர்ந்திருந்தாள். அவன் எலும்பும் தோலுமாக கட்டிலில் கிடந்தான். முகத்தில் மரணத்தின் சாயை படிந்துகிடந்தது. அவன் தனது சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி, மிகுந்த பிரயாசப்பட்டு, ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினான்.

"மரணத்தைக் கண்டு மனிதன் பீதியடைகிறான். ஏன்? வாழ்க்கையிலுள்ள பற்றுத்தான் காரணம். நான் சாவை வாவென்றழைக்கிறேன். வாழ்ந்தது போதும் போதுமென்றாகிவிட்டது. என்வாழ்க்கைப் பங்காளியாக வந்த நீ அன்புள்ளவள், பண்புள்ளவள், அளகுள்ளவள், அறிவுள்ளவள் ஆனால் ஒன்றில்லை: அதுதான்இன்சொல். அதுதான் உன் சுபாவம்; பிறவிக்குணம். நாய் வாலை நீட்டினாலும் நீட்டலாம்; பிறவிக்குணத்தை மாற்றுவது அசாத்தியமென்பதை இன்று உணர்கிறேன். எனக்கு உனது அன்பையும், பண்பையும், அழகையும், ரசிக்கத் தெரியவில்லை. ஆனால் நீ வாய்க்காரியாக இருப்பதைமட்டும் வெறுக்கத் தெரிந்தது. சங்கீதக் கச்சேரிக்குப் போகிறவன் சாரீரம், இராகம், தாளம் எல்லாவற்றையுமேரசிக்கிறான். பாட்டின் பொருளுக்காகமட்டும் சங்கீதம்கேட்பவர்கள் இல்லையா? அப்படித்தான் நானும். ஆனால் பாட்டின் பொருள் எனக்குப் பிடிக்கவில்லை. அல்லது புரியவில்லை என்றுதான் வைத்துக்கொள்ளேன்."

(13-ம் பக்கம் பார்க்க)

# ஹிட்லரின் அந்தரங்க வாழ்வில் நடந்தவை!
# நிறைவேருத ஆசை மிருகத்தனமாகமாறியது!

## ஜோ. ஏ. எம். தாஸ்

அறுபது லட்சம் உயிர்களைக் கொன்று குவித்த கொடியவன், அடல்ப் ஈச்மனின் வரலாற்றையும் அவன் செய்த கொடுமைகளையும் கடந்த சில வாரங்களாகப் புதினத்தில் படித்து வந்தீர்கள். ஈச்மனின் காலத்திலேயே வாழ்ந்தாள் ஒரு பெண்ணழகி. ஆனுலும் வல்லரக்கி! ஈச்மனுக்கு மூத்த சூர்ப்பனகைதான். அவள் பெயர் எல்ஸி. ஆண் இனத்தையே துன்புறுத்தி இன்பம் கண்ட அந்தக் கிராதகி செய்த கொடுமைகளும், அவளது சுவையான வாழ்க்கை வரலாறுகளும், அடுத்தவாரம் புதினத்தில் ஆரம்பமாகவிருக்கிறது!

சுவையான ஒரு நாவலை படித்து அனுபவிக்கும் வாசகர்கள், அதை எழுதிய ஆசிரியரைப்பற்றியும் அறிந்துகொள்ள விரும்புவது இயற்கை. அதைப் போலவே, கொடுமைகள் பலவற்றைப் புரிந்த ஈச்மன், எல்ஸி, போன்ற கல்நெஞ்சக்காரர்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது யார் என்பதையும் அறிந்துகொள்ள விரும்புவது இயற்கைதானே? அவன் தான்—

ஹிட்லர்!

யுத்த காலத்தில் இந்தப் பெயரை உலகத்தின் மூலை முடுக்குகளில் வாழ்ந்த மக்கள்கூட நடுநடுங்கிக்கொண்டுதான் உச்சரித்தார்கள்! அவனை அறியாதவர்கள் இந்த உலகில் யாருமே இல்லை. அவனும் ஒரு மனிதன் தான். மனித இனத்தில் பிறந்த ஹிட்லர் அசுரனுக மாறியதற்குக் காரணம் என்ன? அவனுடைய வாழ்க்கையே மிக விசித்திரமானது!

காதல் இன்பத்தை அனுபவிக்கக்கூடிய விதத்தில் ஹிட்லரின் உடலமைப்பு அமையவில்லை என்று உடற்கூறு வல்லுநர்கள் பலர் ஆணித்தரமாகக் கூறுகின்றுர்கள். எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், மூதனியவர்களுக்குக் காதல் சம்பந்தமான துறைகளில் அளவுக்கு மீறிய ஆசை இருப்பது இயற்கை என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த உண்மை! மிகப் பெரிய சிந்தனையாளனும், அறிவாளியுமான ஹிட்லரின் நரம்புக் கோளங்கள் எந்த நேரத்திலும் நன்ருகமுறுக்கேறி, தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்ததால், அவனுக்குக் காதல் துறைகளில் அளவுக்கு மீறிய வேட்கை இருந்து வந்திருக்கிறது.

ஆனுலும்—

அவனுக்கு ஒரு பயங்கரக் குறை, அவனுக்குக் காதல் வாழ்க்கையில் ஒரு பூரணமான இன்பத்தை அனுபவிக்க முடியாமல் செய்துவிட்டது. இதன் காரணமாகத் தன் சக்தியையும், சிந்தனையையும் வேறு விதத்தில் திருப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவேதான் அவன் அரசியல் துறையில் அளவுகடந்த ஆதிக்கம் செலுத்திவந்தான்.

இயற்கையின் சிருஷ்டி கோளாறு காரணமாக ஹிட்லருக்குக் காதல் இன்பத்தை அனுபவிக்கும் நிலை மறுக்கப்பட்டு விட்டது. எனவே அதை ஈடுசெய்யும் விதத்தில் ஒரு பேரானந்த நிலையை வேறு துறையில் சிருஷ்டித்துக்கொள்ள முயன்றான்

அதுதான்—

பேச்சுத்துறை!

ஹிட்லர் மேடையில் ஏறிப் பேசினல், கூட்டத்தில் உள்ள ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், கிழவர்கள் அத்தனைபேரும் அவன் வெளிப்படுத்தும் அதே உணர்ச்சியைத்தாங்களும் வெளிப்படுத்திப் பரவசநிலை அடைந்துவிடுவார்கள்! அவன் பேச்சைக் கேட்டு மயங்கிய கட்டழகிகள் பலர் உண்டு!

ஹிட்லருக்குப் பல பெண்களிடம் நட்புறவு இருந்துவந்திருக்கிறது. லெனீ ரிபென்ஸ்டோல் என்பவள் ஒரு சினிமாநடிகை. ஹிட்லர் அவளுக்குச் செய்த உதவிகளுக்காக சினிமாத் துறையிலிருந்து விலகி, அவனோடு வாழ்க்கை நடத்தத் துணிந்து வீட்டாள் அவள்!

'ஈவா பிரௌன்' என்ற மற்ருெரு பெண், ஹிட்லருடன் சேர்ந்தே உயிரை விட்டாள்!

ஹிட்லரின் படுக்கையறைப் பதுமைகளாக இருந்த பெண்கள் இன்னும் எத்தனையோ பேர் உண்டு! இத்தனை பெண்கள் இருந்தும் அவனுல் பூரணமான காதல் இன்பத்தை அனுபவிக்கமுடியவில்லை. மனித இனத்தின் இயற்கையான இன்பங்கள் தனக்கு மறுக்கப்பட்டுவிட்டதால், மனித குலத்தின்மீதே அவனுக்கு அளவு கடந்த பொருமையும் வெறுப்பும் ஏற்பட்டு விட்டது. தனக்குக் கொடுத்து வைக்காத இன்பத்தைப் பூரணமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் மனித இனத்தையே தன் காலடியில் போட்டு நசுக்க முடிவுசெய்தான்.

ஹிட்லருக்கு 'கெலி ரொபல்' என்றஒரு உறவுப் பெண் இருந்தாள். அவளிடம் அவன் கொண்டிருந்த காதல் உறவு மிக இரகசியமாக வைக்கப் பட்டிருந்தது. ஹிட்லரின் மோகவெறிக்கு ஈடுகொடுத்துவந்த அந்தப் பெண் 1931ம் ஆண்டு ஹிட்லரின் இல்லத்திலேயே தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டாள்! ஆனுலும் அவளது மரணத்தைப் பற்றி பல மர்மமான தகவல் பின்னர் வெளியாயின. அவளது மூக்கு உடைந்துபோயிருந்ததாகவும்; உடல் முழுவதும் இரத்தக் காயங்கள் இருந்ததாகவும் பேச்சு அடிபட்டது, ஆனல் இந்த விஷயம் விசாரணை செய்யப் படாமலே மூடி மறைக்கப் பட்டுவிட்டது!

'கெலி ரொபல்' என்ற அந்தப் பெண் இறப்பதற்கு சில காலத்திற்கு முன்னர், "அவன் செய்யும்படி சொல்லும் செய்கைகளை நான் உங்களிடம் விபரித்துக் கூறினல் நீங்கள் நான் சொல்வதை நம்பமாட்டீர்கள்... அவன் ஒரு ராட்சஸன்" என்று சொல்லியிருக்கிருள்.

அவளை நிர்வாணமாக வைத்து, அவளுடைய ஒவ்வொரு அவயவங்களையும் படம் பிடிப்பதைப் போல் அவள் உருவத்தைப்பற்பல விதமாக வரைந்திருக்கிருன். அந்தப் படங்கள் பிற்காலத்தில் ஒரு ஆசாமியின் கையில் சிக்கிவிட்டன, அந்தப் படங்களை வைத்துக் கொண்டு அவன் ஹிட்லரைப் பயமுறுத்தி வந்தான். ஆனல், பணம் பத்தும் செய்யுமல்லவா? தனது நாஜிக் கட்சியின் பொருளாளர் மூலம் ஏராளமாகப் பணம் கொடுத்து அந்த படங்களைத் திருப்பி வாங்கிக்கொண்டான் ஹிட்லர்.

பொதுவாகவே நாடகம் சினிமா, சர்க்கஸ் போன்றவைகளில் அரை நிர்வாண ஆடைகளை அணிந்து வருபவர்களைப் பார்க்கும் பொழுதுதான் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுமாம்! அலங்கோலமான நிலையில் ஆடையணிந்து மேடையில் தோன்றும் பெண்களுக்கு விசேஷமான பரிசுகளை ஏராளமாக வழங்கியிருக்கிருன். அவனது அறைச் சுவர்களில் அலங்கோலமான நிலையிலிருந்த பெண்களின் படங்கள் பல மாட்டப்பட்டிருந்தன. அப்படிப்பட்ட படங்களை வரைந்து கொண்டுவரும் ஓவியர்களுக்கு உயர்ந்த பரிசுகள் பலவற்றைக்கூட வழங்கியிருக்கிருன்!

ஹிட்லரின் வாழ்க்கையில் நடைபெற்ற மிக முக்கியமான சம்பவங்களில் இதுவும் ஒன்று!

அந்தக் காலத்தில் 'கிங் காங்' என்றபெயரில் ஒரு திரைப்படம் வெளி வந்தது. அந்தப் படத்தில் ஒரு பெரிய மனிதக் குரங்கு ஒரு அழகிய இளம் பெண்ணைக் கண்டவுடன் அவள்மீது காதல்கொண்டு விடுகிறது. அதற்குப் பிறகு அந்தக் குரங்கு எந்தப் பெண்ணைக் கண்டாலும் மோகவேட்கையோடு அந்தப் பெண்ணை அடைந்து விடவேண்டுமென்றுமுயல்கிறது! ஒரு சமயம் அந்தப் படத்தைக் ஹிட்லருக்குப் போட்டுக் காண்பித்தார்கள். தன்னையே மறந்து அந்தக் காட்சியில் ஒன்றிவிட்ட அவன், மீண்டும் மீண்டும் அதைப் பல தடவைகள் போட்டுக் காட்டும்படி வேண்டினுனும்.

உண்மையான தனது வாழ்க்யையில் தான் அனுபவிக்க முடியாத சக்தியை, கற்பனை உலகில் அந்தமனிதக் குரங்கின் மூலம் கண்டு, தானே அதைஅனுபவித்ததைப் போன்ற மனத்திருப்தி அடைந்தானும்!

---

**எல்ஸி !**

கட்டான உடல், காந்தவிழிகள், கவர்ச்சித்தோற்றம் நெஞ்சிலே பொங்கி வரும் வெறியை கண்களிலே தெறிக்கவிடும் பார்வை — இவைகளின் உடைமைக் காரிதான் எல்ஸி!

**எல்ஸி !**

ஹிட்லரின் பயங்கர ஆட்சியிலே நினைக்கவும் கூசுகின்ற பாதகங்கள் புரிந்தோர் பலர், அந்த அரக்கர் கூட்டத்தின் இன்பவல்லிதான் எல்ஸி!

**எல்ஸி !**

இனக்கவர்ச்சியையே ஆயுதமாகக் கொண்டு கட்டிளம் காளைகள் பலரைப் பலிவாங்கிய இந்த மோகினிப் பிசாசின் கதை நெஞ்சை நிலைகுலைக்கும்!

இவளுடைய கதையைச் சுவைபட எழுதுகிருர் உங்கள் அபிமான எழுத்தாளர் ஜோ. ஏ. எம். தாஸ்

அடுத்த வார இதழில் ஆரம்பமாகிறது!

---


மங்கையர் அணியும்

தங்க நகைகள்



★ அழகாகவும் ★ நாகரிகமாகவும்
★ நம்பிக்கையாகவும் வாங்குவதற்கும்
ஓடர்கள் கொடுப்பதற்கும்

பொ. அம்பலவாணர்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலரி ஸ்ரோர்ஸ்,
114, செட்டியார் தெரு, கொழும்பு.

# கேள்வி-பதில்!

ரமணன்

கே.எஸ். ராஜரத்தினம்,
மூளாய்

கே:- பெண்பார்க்க மாப்பிளை வந்தால், சில காரணங்களால் மாப்பிளையின் மனம் தடைப்பட்டுத் திருமணம் நடைபெறவில்லை. அதற்காகப் பெண்வீட்டார் பழிவாங்கத் துணியலாமா?

ப:- பெண்பார்க்க வருவது திருமணத்துக்குச் சம்மதித்ததாகி விடாது. பெண்பார்க்கும் படலம்முடிந்தபின் பெண்ணை மாப்பிளைக்கோ, மாப்பிளைக்குப் பெண்ணையோ பிடிக்காமல் போய் விடுவது ஒன்றும் அதிசயமானதல்ல. இதில் பழிவாங்க என்ன இருக்கிறது?

க. தபோதனன், கண்டி

கே: மறுபிறப்பு உண்டு என்று சொல்லுகிறீர்களே! நீங்கள் அதை நம்புகிறீர்களா?

● அரசியலும் சாராயத்தவறணையும் ● மாணவிகள் துப்பறியும் நாவல் படிப்பதேன்? ● ஈழத்தமிழன் முன்னேறுவானு! ● தமிழரசு வடக்கு - கிழக்கு எம். பி, களிடம் தகராறு?

ப: சில ஊர்களில் சிறு பிள்ளைகள் தாம் முற்பிறவியில் பிறந்த ஊர், நடமாடிய இடங்கள் ஆகியவற்றைச் சரியாகக் கூறினர்கள். என்று பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தனவே அதை நீர் நம்புகிறீரா?

ஆர். வின்ஸன்ட்,
கொழும்பு—13

கே; சிகரெட் பிடிப்பது கூடாதென்று தெரிந்தும் மேலும் புகைக்கிருர்களே ஏன்?

ப: பழகிய பழக்கத்தை உடனடியாகத் தடுக்க முடியாததே காரணம். முயற்சிசெய்தால் சிறிது சிறிதாக அதை விட்டு விடலாம். விட்டுவிடுவதுநல்லதுங் கூட.

எஸ். பரமானந்தம்
கொழும்பு—13

கே: கத்தோலிக்கப்பெண்கள் கோவிலுக்குள் போகும்போது தலையில் முக்காடிட்டுக் கொண்டு போகிருர்களே, இது ஏன்?

ப: சிந்தையை ஒருநிலைப்படுத்தி, புலனை ஆண்டவனிடத்துச் செலுத்துவதற்கு முக்காடு உதவுகிறது. முக்காட்டின் நோக்கம், தமது பார்வை வெளியே செல்லாமல் தடுப்பது ஒன்று. தமது முகம் பிறருக்குத் தெரியாமல் இருப்பது மற்ருென்று.

திருமலைராஜன்
திருகோணமலை

கே:- மேல் நாட்டு அரசியலுக்கும் நம் நாட்டு அரசியலுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: அவர்களது அரசியல் வானவெளியை நோக்கிச் செல்கிறது! ஆனுல் எமது அரசியலோ சாராயக் கடைக்குத்தானே ராஜநடை போடுகிறது!

க. கனகசபை, அம்பாரை

கே:- பள்ளிக்கூட மாணவிகள் துப்பறியும் நாவல்கள் படிப்பதேன்?

ப:- திருமணம் செய்த பின்னர் கணவனைப் பற்றி துப்பறிய வேண்டாமா?

வி. டி. ஞானவேல்,
சென்னை—3

கே.- தேர்தல் பற்றிய தங்கள் கருத்தென்ன?

ப:- எந்தத் தேசத்திலே எப்பொழுது நடந்த தேர்தலைப் பற்றிக் கேட்கிறீர்கள்?

அ. சதாசிவம்; செங்கலடி.

கே - இலங்கையில் தயாரிக்கும் 'தோட்டக்காரி' எப்படி? எப்பொழுது வெளியாகும்?

ப:- இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் வெளியாகலாம்! மற்றும் தங்களது எப்படி? என்ற கேள்விக்கு நான், படம் வெளியாகாமல் பதில் கொடுப்பது 'எப்படி'?

சபா. சொ. சிவம்,
திருகோணமலை

கே:- 'பேய்' என்பதன் பொருள் யாது?

ப:- பொய்!

வா. குவேனி, வெள்ளவத்தை

கே:- 'வரதர்' இப்பொழுது அதிகமாக எழுதுவதில்லையே. ஏன்?

ப:- கேளுங்கள். தங்களைப் போல் பலர்கேட்டதால்தான் இவ்வாரம் ஒரு சிறு கதை எழுதியுள்ளார்!

பெ. இராமலிங்கம்
கந்தகெதர

கே:- ஈழத்துத் தமிழனின் முன்னேற்றம் எப்போது தொடங்கும்?

ப:- என்றைக்கவன் மற்றவர்களைத்திருத்துவதை விட்டுவிட்டுத் தன்னைத் திருந்தத் தொடங்குகிருனே அன்றைக்குத்தான் அவனுக்கு உய்வுண்டு!

செ. ஆ. இரா,
லுவகொட.

கே:- உலகிலே எத்தனை சாதியினர் இருக்கின்றனர்?

ப:- மூன்றே மூன்று சாதியினர்தான்! முதலாவது சாதி ஆண்சாதி, இரண்டாவது சாதி பெண்சாதி; மூன்ருவது சாதிதான் இரண்டுமே அல்லாத அலிச்சாதி!

**பரிசுக்கேள்வி**

ஜெயராமன்
293 - வாஸ்டாக்ஸ் சாலை
பூங்கா நகர்,
மதருஸ்—3

கே:- படிப்பது பணத்தைச் சேர்க்கவா? அல்லது அறிவைப் பெருக்கவா?

ப:- இரண்டுக்குமல்ல! வாத்தியாரிடம் நூறுக்கு நூறு மார்க்குகள் எடுப்தற்கு.

ம. துரைப்பாண்டியன்,
கொழும்பு-12

கே:- உங்களால் பதிலளிக்க முடியாதகேள்விகளைப் பிரசுரிக்கமாட்டீர்கள் என்கிறேன்!

ப:- ஒகோ! நீர் நினைத்துக் கொண்டீரோ இந்தக் கேள்வியையும் பிரசுரிக்க மாட்டேன் என்று?

எம். அப்துல் கலீல்
பாணந்துறை.

கே:- இந்தக் காலத்தில் ஒருவனுக்குச் 'சனி' யன் பிடித்துவிட்டதென்ருல் எப்படியறிவது?

ப:- ஒன்றில் அவன் பத்திரிகை தொடங்குவான், அல்லது அரசியலில் குதிப்பான்!


எமது ஆதரவாளர்களுக்கும்
அபிமானிகளுக்கும்
மகிழ்ச்சியும் மங்களகரமுமான
புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

டயாரும்ஸ்
யாழ்ப்பாணம்

உங்கள் கவலை என்ன?

● கடன் தொல்லையா? கஷ்ட நிலையா?
● காதலில் வெற்றி பெற வேண்டுமா?
● இல்லற வாழ்வில் இன்பம் தேவையா?
● கணவன்-மனைவிக்கிடையே மனக்கசப்பா?
● வழக்குக் கஷ்டங்களா? பரீட்சையில் துன்பமா?
● தொழில் உயர்வா? பிணிகளினல் துன்பமா?
● மங்கையருக்கு ஏற்படும் மாதவிடாய் நோயா?

விஷயங்கள் பரமரகசியமாக வைக்கப்படும்.
கவர்மென்ட் றெஜிஸ்டர் மந்திராச்சாரியார்
பி. எம். திசநாயகா
(நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)
அருத எண்ணெய் அலுவலகம்,
கம்பளை.

புதுவருடத் திருநாளுக்கு
சிறந்த புடைவை வகைகளை
குறைந்த விலையில்
விரும்பிய விதமாகத் தெரிவுசெய்ய
விஜயம் செய்யுங்கள்:
ஞானபண்டிதன்
ஜவுளிக்கடை
228, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உங்கள் உடைகள்
வெண்மையாகவும் பிரகாசமாகவும்
இருக்கவேண்டுமா?
அப்படியானுல்,
ஒருமுறை எம்மிடம் விஷயஞ் செய்யுங்கள்
உண்மை விளங்கும்
குறித்த தவணையில் அழகியமுறையில்
Dry Clean செய்து தருவோம்
லிங்கம் லோன்றி
78, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(விரகத்தி ஓட்டுத் தொழிற்சாலைக்கு முன்)

புகைக்க இன்பம் தருவது:
ஜெக்கட் சுருட்டு
உயர்ந்த புகையிலையினுல் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட
ஜெக்கட் சுருட்டை இன்றே வாங்கி உபயோகித்து மகிழுங்கள்!

## மயானத்துக்கு வேலியா?

ஒரு சிறிய கிராமத்தில் ஒரு பெரியவர், மயானத்துக்கு வேலி கட்டுவதற்காகக் கிராமத்து மக்களிடம் நன்கொடை வசூலித்துக்கொண்டிருந்தார். ஒரே ஒரு ஆளைத் தவிர மற்றவர்கள் எல்லாம் தங்களால் இயன்ற பணத்தை நன்கொடையாகக் கொடுத்தார்கள்.

கடைசியில் அந்தப் பெரியவர், பணம் கொடுக்காத ஆளை நோக்கி, ''நீ மட்டும் ஒன்றும் கொடுக்கவில்லையே; காரணம் என்ன?'' என்று கேட்டார்.

''காரணமா? சொல்லுகிறேன், கேளுங்கள்: மயானத்திற்கு வேலி தேவையில்லை என்பது என் கருத்து ஏனென்றால், அதற்குள் இருக்கிறவர்கள் வெளியே வரமுடியாது; வெளியில் இருப்பவர்களோ அதற்குள் போகக் கண்டிப்பாக விரும்பமாட்டார்கள்! ''வேலி எதற்கு?'' என்றான் அவன்.

## கடவுளின் கை

''கடவுளை நான் பார்க்கமுடியவில்லை; தொட்டு உணர முடியவில்லை, எதற்காக நான் அவரை நம்பவேண்டும்?—தொழவேண்டும்?'' என்று அலுத்துக் கொண்டாள் ஒரு பெண்.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அவளுடைய கணவன், ''நீ கண்களை மூடிக்கொண்டு உன்னைத் தொடும்படியாக அவரை வேண்டிக்கொள். கட்டாயம் உன்னைத் தொடுவார்' என்று கூறினான்.

அந்தப் பெண்ணும் அப்படியே கண்களை இறுக மூடிக்கொண்டு. அவளைத் தொடுமாறு ஆண்டவனை வேண்டிக்கொண்டார். மறுகணம் ஒரு கை தன்னைத் தொடுவதை உணர்ந்த அவள், கண்களை திறந்து பார்த்தாள். தன்னைத் தொட்டது தன் கணவனின் கைதான் என்பதை உணர்ந்தாள்.

''என்ன இது? நீங்கள் அல்லவா என்னைத் தொட்டீர்கள்?'' என்றாள் மனைவி.

''ஆமாம், உண்மைதான். கடவுள் மோட்சத்திலிருக்கிறார். அவர் வெகுதூரம் கையை நீட்டுவதற்குள் நேரமாகிவிடாதா? அதனால்தான் உனக்குப் பக்கத்திலிருந்த கையை அவர் உபயோகித்துக் கொண்டார்!'' என்றான் கணவன்.

## எது பெரிய மாளிகை?

அரபு நாட்டுச் சக்கரவர்த்தி கலீபா ஹாரூன் ரஷீத் தன் மந்திரியின் மாளிகைக்கு ஒரு சமயம் விஜயம் செய்தார்.

# சுவையான செய்திகள்

அப்பொழுது மாளிகைக்கு வெளியே மந்திரியின் மைந்தன் விளையாடிக்கொண்டிருந்தான். சிறுவனிடம் விளையாட்டாகக் கேட்டார் அரசன்:

''குழந்தாய், என்னுடைய மாளிகையா, உங்களது மாளிகையா அழகானது?''

''எங்களதுதான்'' பையன் தயங்காமல் பதிலளித்தான்.

''அதெப்படி? என்னுடைய ராஜமாளிகையைக் காட்டிலுமா உங்களது மாளிகை அழகானது?''

''எப்படியா? அரபுதேசத்தின் அரசரே எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறாரல்லவா?''

பையனின் சாதுரியமான பதிலைக் கேட்ட அரசன் மந்திரிக்கு ஏற்ற மகன்தான் என்று தனக்குள் வியந்துகொண்டார்.

## பெருகும் பறவைக் கூட்டம்

உலகிலுள்ள பட்சிகளின் எண்ணிக்கையை இரண்டாவது உலக மகாயுத்தத்துக்கு முன் கணக்கெடுத்த போது 75,000,000,000 பட்சிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை உலக ஜனத்தொகையைக் காட்டிலும் நாற்பது மடங்கு அதிகமாகும்.

அணுகுண்டுப் பரீட்சைகளின் விளைவாக பறவைகளின் பரம்பரை அற்றுப் போயிருக்கக் கூடும் என்று பலரும் கருதிக்கொண்டிருக்கும் அதே வேளையில் திடீரென்று இப்பொழுது எண்ணிக்கை பெருமளவு உயர்ந்து விட்டது.

பிரிட்டனில் மட்டும் பறவைகளின் எண்ணிக்கை 90,000,000 ஆக உயர்ந்து விட்டதென ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

## வீட்டை விட்டு வெளியேறாதே!

இரவு பத்து மணியிலிருந்து காலை ஆறு மணிவரை வியட்நாமிலுள்ள மக்கள் தத்தம் வீடுகளில் இருட்டறைக்குள் குடி இருப்பதுபோல் பதுங்கியிருக்கிறார்கள் என்றால் உங்களால் நம்பமுடியாதுதான்; ஆனால் அது உண்மை,

வியட்நாமிலுள்ள வீடுகள் அனேகமாக எல்லாமே தட்டுமாடிவீடுகள். இந்த 'பிளாட்ஸ்'களிலுள்ள பிரதான கதவுகள் இரவு பத்துமணியானதும் அடைக்கப் பட்டுவிடும். அதன் வெளியே யாராவது செல்வதாயினும்சரி, அல்லது வெளியே இருந்து உள்ளே வருவதாயினும்சரி குற்றப் பணம் செலுத்த வேண்டும்.

இரவு பத்துமணி தொடக்கம் 12 மணிவரை குற்றப்பணமாக 2 பென்ஸ் வசூலிக்கப்படுகிறது. 12 மணியிலிருந்து காலை ஆறுமணிவரை, 4 பென்ஸ் வசூலிக்கப் படுகிறது.

ஒருவர் ஒரு அவசரமான கடிதத்தைப் போஸ்ட் செய்ய வேண்டுமானால் முத்திரைச் செலவைவிட, வெளியே செல்லச் செலுத்தும் வரி 2 பென்ஸ் மறுபடி உள்ளே திரும்பிவரச் செலுத்தும் வரி 2 பென்ஸ் ஆக 4 பென்ஸ் தண்டச் செலவு ஏற்படுகிறது.

## பிரசவ வேதனையை தணிக்க புதுவழி

சிகிச்சைக்காகச் செல்லும் நிறைமாதக் கர்ப்பவதிகள் குழந்தைப் பேறை அடையும்போது வலிதாங்காது ஓலமிடுவது ஆஸ்பத்திரிகளில் தினசரி நடைபெறும் சாதாரண நிகழ்ச்சி.

அவ்விதம் அலறும் பரிதாபத்துக்குரிய பெண்கள் நமது ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் பரிகாரப் பெண்களிடம் திட்டு வாங்குவதும் பகிரங்க இரகசியம்.

ஆஸ்திரேலியாவில், சிட்னி என்ற நகரத்திலுள்ள ஒரு பிரசவ விடுதியில் தாய்மையடையும்போது பெண்களுக்கேற்படும் வலியைத் தணிப்பதற்கு ஒரு புது வழியைக் கையாளுகிறார்கள்.

இனிமையும், மென்மையும் கலந்த சங்கீதத்தை 'ரேப்றெக்கோடர்' மூலம் ஒலிப்பதிவு செய்து பிரசவ நேரத்தில் பாடவைக்கிறார்கள், இதனால் நல்ல பலன் ஏற்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் அறிவிக்கிறார்கள்.

## 43 வருடம் நடந்து சென்றவன்

விபரந் தெரிந்ததும் சிலர் தங்களுக்கென ஒரு லட்சியப் பாதையை வகுத்துக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள். சிலருக்கு லட்சியமென்பதே கிடையாது,

வேறு சிலரது லட்சியம் முரட்டுத் தனமானதாக இருந்த போதிலும், கொள்கையினின்றும் வழுவாமல் நடந்து கொள்வார்கள்.

தனது வாழ்வின் லட்சியம் 'நடப்பதே' எனக் கருதி வாழ்க்கையின் பெரும்பகுதியை —அதாவது 43 வருடங்களை —ஒருவன் நடந்தே கழித்தானென்றால்நம்ப முடிகிறதா?

பிராங்க் பட்லர் என்பவன் இந்த வருடந்தான் நடப்பதை நிறுத்தியிருக்கிறான். கடந்த 43 வருடங்களில் இவன் 70000 மைல்களை நடந்து முடித்திருக்கிறான்.

ஐரோப்பாவில் தன் பிரயாணத்தை ஆரம்பித்த பட்லர் ஆசியா ஊடாக ஜப்பான் வரையில் சென்றான். அங்கிருந்து ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, வட அமெரிக்கா, ஆகிய இடங்களைச் சுற்றிவிட்டுக் கடைசியில் ஆபிரிக்காவுக்கு வந்து சேர்ந்தான். இங்கிருந்து இவன் தனது சொந்த ஊருக்கு வாகனத்தில் செல்ல உத்தேசித்திருக்கிறானாம்.

## எழுத்தாளக் கிழவரின் திருமணம்!

கலிபோர்னியாவில் 83 வயது கிழவர் திருமணம்செய்து கொள்ளப் போகிறாராம்! மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை அவருக்கு!

அந்தக்கிழவர் பிரபல நூலாசிரியர். அப்டன் ஸிங்க்ளேர் என்பது அவரது பெயர். அவர் மணந்துகொள்ளும் பெண்ணின் வயது 79! அவள் ஒரு விதவை. மேரி எலிஸபெத் அவளது பெயராம்! திருமணம் செய்துகொள்ள லைசென்சு கேட்டு மனுச்செய்திருக்கிறார் அவர்.

அப்டன் ஸிங்க்ளேர் புலிட்ஸர் பரிசு பெற்றவர், அவருடைய முதல் மனைவி சென்ற ஏப்ரலில் காலமானார், அப்போது அவருக்கு வயது 78.

## மயங்கச்செய்ய 4 போத்தல் குளோறபோம்

ரொறங்கா பாக் மிருகக் காட்சிசாலையில் ஒரு கரடி இருக்கிறது. இதனுடைய நிறை பதினைந்து அந்தர்.

திடீரென்று 'கொக்கோ' என்ற இந்தக் கரடிக்குப் பல் வலிஏற்பட்டுவிட்டது. அதன் பல்லைப் பிடுங்க ஒரு டாக்டர் அழைக்கப்பட்டார்: எந்த விதமருந்தினாலும் அதன் சக்தியை மட்டுப்படுத்த முடியவில்லை, கடைசியாக நாலு போத்தல் குளோறபோம்கொடுத்தபின் தான் 'கொக்கோ'வுக்குசிறிது மயக்கம் ஏற்பட்டது!

''ஆ ... ஐயோ.
தலைவலி!... தலை வலி!...
இதைப்போக்கமருந்தே இல்லையா?''
''யார் சொன்னது?
இதோ இருக்கிறதே,
ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்''



விலை ரூபா 3-00 (தபாற் செலவு சதம் 95)
வேறு நோய்களையும் இது குணமாக்குகிறது. அவற்றின் விபரமறிய இனமாக அனுப்பப்படும் 52 பக்கங்கள் உள்ள கேட்லாக்கைப் பாருங்கள்.
ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.



✻ மின்னும் வைரங்களுக்கும் ✻ உயரிய நகைகளுக்கும்
தங்கப் பவுண் நகை மாளிகை
போன்: 585.
கே. என். மீரான் சாஹிப்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# 'இனியகனிக்குவலியதோல்'

[ 9-ம் பக்கத் தொடர்ச்சி ]

அவனுக்கு ஆயாசமாக இருந்தது. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிற்று மேலே பேச முடியாது நிறுத்தினுன். அங்கு அமைதியும் நிசப்தமும் நிலவின. அவனுக்குக் கொஞ்சம் பழரசம் பருக்கினுள், அவள். விருப்பு வெறுப்பின்றி அவன் அதைப் பருகினுன். கொஞ்சம் தெம்புண்டாயிற்று. தொடர்ந்தான்.

''நீ நினைக்கலாம், நான் உன்னைப் புரிந்துகொள்ளவில்லையென்று. நான் சரிவரப் புரிந்துகொண்டுதானிருக்கிறேன். எனக்கு எல்லாமிருந்தென்ன? உன்னிடத்துள்ள அந்த ஒரே குறையை – நாவடக்கமின்மையை – பொருட்படுத்தாது புறக்கணிக்கும், சுட்டிக் குத்திக் காட்டாதுவிடும் பண்பில்லை. இதனுலேயே எனது வாழ்க்கை நரகமாகிவிட்டது, இல்லை நரகமாக்கிக்கொண்டேன்.

அவருக்கு அழுகை பீறிக்கொண்டுவந்தது. கிரமப்பட்டு அதை அடக்கிக்கொண்டார். அவன் சுயமான ஆளாக இருந்தால் அழுது விழுந்து அவன் கூறியதை ஆட்சேபித்து அல்லது கேலி பண்ணி ஒரு உவந்த யுத்தமே தொடுத்திருப்பார். அவன் இருந்த நிலையை எண்ணி அவள், தனது இயற்கைச் சுபாவத்தை மூடி மறைத்துப் போலி வேஷம் போட்டுப் பேசினுள்.

''இவ்வளவு தூரம் என்னைப் புரிந்துகொண்ட நீங்கள் என்னிடம் ஒரு வார்த்தை கூறியிருந்தால் என் வாழ்க்கையைப் பாழாக்கியாவது உங்களை வாழவிட்டிருப்பேனே! எல்லாம் தெரிந்த உங்களுக்கு 'இனிய கனிக்கு வலிய தோல்'' என்பது .தெரியாமலிருக்குமென்று நான் கண்டேனு? நீங்களில்லாமல் எனக்கு வாழ்வேது? உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறேன், என்மீது உங்களுக்கு எள்ளளவேனும் அன்பிருந்தால், என்வாழ்வில் உங்களுக்கு அக்கறையிருந்தால் நீங்கள் வாழ்ந்தேயாகவேண்டும்.''

அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. குழந்தைபோல விம்மி விம்மி அழுதாள். வழக்கத்துக்கு மாருகக் கணவனை எடுத்தெறிந்து பேசாமல் பணிந்து பேசியதால் வெட்கமும் ரோசமும் அவளை வாட்டி எடுத்தன. வாழ்க்கையில் அன்றுதானே அவள் கணவனிடம் அன்பாகவும் அடக்கமாகவும் பேசியிருக்கிருள்.

அவனுடைய வதனத்தில் மரணத்தின் கோரம் தேய்ந்து ஜீவகளை மிளிர்ந்தது. அவன் ஆஸ்பத்திரிக்குச் சென்ருன். ஆப்பரேஷன் ஆயிற்று. அவள் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி மன எழுச்சிகளை அடக்கி அவனுக்கு வேண்டிய பணிகளைப் பாங்காகச் செய்தாள். சிரமபாத்தியமான வேஷமாயிருந்தும் கச்சிதமாக நடித்து முடித்தாள். ஒரு வாரத்தில் அவன் பழைய மனிதன் ஆனுன்.

வீட்டிற்கு விரைந்து வந்தான், அவள் அங்கு இல்லை. தேடிப் பார்த்தான் அவள் அகப்படவில்லை; ஒரு கடிதம் அகப்பட்டது. அதைப் பிரித்துப் படித்தான்.

''இத்தனை நாளும் திருந்தாத நான் இனிமேல் திருந்த முடியுமா அல்லது சுபாவம்தான் மாறுமா? நீங்கள் ஜீவித்திருக்க வேண்டுமென்பதற்காக கடந்த சில தினங்களாக நான் பட்ட அவஸ்தை உங்களுக்கு எப்படித் தெரியப்போகிறது! வேஷம் போட்டேன் என்ருல் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். எனக்கு அதில் அனுபவம் அறவே இடையாது. ஒரு நாளைக்கு வேஷம் கலைந்தால் விபரீதமாக முடியும் நான் போகிறேன். என்னைத் தேடவேண்டாம்.''

கடிதத்தைப் படித்ததும் கல்லாய்ச் சமைந்து நின்ருன், அவன்.

அவள் எங்கே போனுளோ தெரியாது. அவன் தேடுகிருன், தேடுகிருன், இன்னும் தேடிக்கொண்டே இருக்கிருன்.

உங்கள் துணிகள்
வெண்மையாகவும்
பிரகாசமாகவும் விளங்க
யாழ் சோப்
உபயோகியுங்கள்.
யாழ் சோப்
தரத்தில் சிறந்தது. அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு பல மடங்கு லாபம் கிடைக்கிறது.
'யாழ் சோப்' பாவனையாளர்களுக்கு சிறப்பு பரிசுகளும் கிடைக்கும். விபரங்களை எதிர்பாருங்கள்!

# அம்மி மிதிப்பதேன்? அருந்ததி காட்டுவதேன்?

புங்கையூர் ஏ. கே. செல்லத்துரை

''விவாகம்'' காதலின் உயர்வென்பது உண்மையேயாயினும் இந்துக்கள் அதை இருவரின் கருத்தொருமித்த செயலினும் விசேஷமாகக் கருதுகிருர்கள். ''மணம்'' என்பது மணமக்கள் தங்களைச் சமூகத்திற்கு அர்ப்பணம் செய்வதாயும் கூறலாம். இந்து திருமணச் சடங்கு இந்த உயர் இலட்சியத்தைக் குறிக்கிறது.

இந்துமத விதிப்படி முழுத் திருமணச் சடங்கு விதிகளும் நடைபெறுமாயின் ஓர் இரவு பூராகவும் நடைபெறும். வைதிக இந்துக்கள் முழுத் திருமணச் சடங்கு முறையையும் அநேகமாய்ப்பின்பற்றுவார்கள் சாதாரண இந்துக்கள் கால நேரத்திற்கு ஏற்றவாறு சில சடங்கு விதிகளைக் குறைத்துக் கொள்ளுவார்கள். இந்து திருமணத்திற்குச் சங்கீதம் ஒரு சிறந்த அம்சம். இந்து திருமணச் சடங்கின் நடைமுறைகள் யாவற்றிற்கும் இசை பின்னணியாக விளங்குகின்றது, ஆகவே இந்து திருமணம் எந்த ஒரு ஏழையின் வீட்டில் நடைபெறினும் அது இசையுடன் கலந்து நிற்கும்.

இந்து திருமணச் சடங்கின் போது நடைபெறும் கிரியைகள் அனைத்திலும் பல சிறந்த கருத்துக்கள் நிறையப் பெற்றிருக்கின்றன. அக்கிரியைகளில் பிரதானமானவை, கன்னிகாதானம், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல், ஓமகுண்டம் வளர்த்தல் முதலாயவைகளேயாம். ''கன்னிகாதானம்'' என்பது ஒரு தந்தை தனது குமாரத்தியை ஒரு தகுந்த மணமகனுக்குத் தானஞ்செய்து கொடுப்பதேயாகும் கன்னிகாதானம் முடியும்வரை ஒரு பெண் தந்தையார் வீட்டிற்கு உரியவராவர். கன்னிகாதானம் கிறீஸ்தவ சடங்கு முறையிலும் உண்டென்று அறியக் கிடக்கின்றது. இந்துக்கள் கன்னிகாதானத்தை ஒரு பாராட்டிற்குரிய கொடையாக மதிப்பார்கள், ஏனெனில் ஒரு மனிதனுக்குத் தன் மகளைப் போன்ற ஒரு விலை உயர்ந்த உடைமை வேறொன்றுமில்லையென்றே மதிப்பிடுகிருர்கள். சிலவேளைகளில் தனக்குச் சொந்தக் குமாரத்தியில்லாத ஒருவர் கன்னிகாதானத்தின் பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதற்காக பிறிதோர் பெண் குழந்தையை தையை வளர்த்து அளித்துக் கன்னிகாதானத்தில் பங்கு பற்றிக்கொள்வர். ''அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்'' தேவேந்திரனேடு லீலைகளாடி அகலிகை கல்லாகச் சபிக்கப் பட்டாள். அகலிகையைப் போல் கல்லாகி அடுக்களையில் கிடவாடில்; அருந்ததியைப் போல் நட்சத்திரமாகி அகண்டவானில் ஜொலிப்பதற்கு கற்பைக் காத்தல் அவசியம் என்ற பாடம் அதில் பொதிந்திருக்கிறது. ''ஓமகுண்டம்'' ஓமகுண்டத்தில் வளர்க்கப்படும் ''தீயானது'' பரிசுத்தத்தின் சின்னமாகும். அத் தீயானது இந்து திருமணச் சடங்கின் சாட்சிகளாவர்.

திருமண வைபவத்தின் அன்று முகூர்த்த வேளைக்கு ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரே மணமகன் இல்லத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பித்துவிடும். இதை மங்கல ஊர்வலம் என்று அழைப்பார்கள். இன்னுர் மகள் இன்னுன், இன்னுர் மகள் இன்னுரை மணம் புரிந்துகொள்ளப்போகின்ருன் என்பதை நாடும், ஊரும், உலகமும், தேவரும் அறிந்து கொள்ளும்படி நடைபெறுவதாகும் இந்த ஊர்வலம். இந்த ஊர்வலம் திருமணப்பந்தரை அடைந்ததும் பெருங்குடி மக்கள் ஓர் புறமும், பெண்பாலார் ஓர் புறமும் மகிழ்ச்சியொளி நிறைந்த விழிகளாக ஓரே நோக்கில் அமர்ந்திருப்பார்கள். திருமணப் பந்தரின் நடுவண் நன்கு அலங்கரிக்கப்பட்ட விதானத்தின்கீழ் மணமகள் வீற்றிருப்பர். வேதப் பிராமணர்கள் மங்கலத்தீ வளர்த்து; திருமந்திரம் ஓதியபடி புனிதச் சடங்கு விதியை ஆரம்பித்து வைப்பார்கள். சிலமணி நேரத்தின்பின் திருநிறைச் செல்வியை அழைத்து வந்து மணமகனின் பக்கலில் அழைத்து வந்து மணமகனின் பக்கவில் அமரச் செய்வர். வேதப் பிராமணர்கள் சமஸ்கிருத சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருப்பர். அவர்களின் சுலோகங்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் ஒலித்துக்கொண்டிருக்கும். வெண்ணெயை ஓமகுண்டத்தின் நடுவில் வளர்க்கப்படும் தீயின்கண் ஊற்றும்போது அது மிகவும் பிரகாசித்தெழுந்து பச்சை நிறமான அக்கினிச் சுவாலையை விட்டெரிந்துகொண்டிருக்கும். அப்போது கன்னிகாதானம் ஆரம்பமாகும். மணமகளின் பெற்ருேர்கள் பயபக்தியுடன் எழுந்து நின்று மணமகனை ''திருநிறைச் செல்வி! எமது புதல்வியும், திருநிறைச்செல்வியுமான.......இங்கே குழுமியிருக்கும் பெரியோர் அறிய, மங்கலத் தீயறிய, வேதப்பிராமணர்அறிய; விண்ணவர் அறிய உமக்குக் கன்னிகா தானம் செய்து தருகின்ருேம். நீவிர் இருவரும் இணைந்து ஒன்றிய நிழலாக பல்லாண்டு—பன்னெடுங் காலம் வாழக் கடவீர்! உங்கள் வாழ்வு இன்றுபோல் என்றென்றும் நிறைவும் மலர்ச்சியும் பெறட்டும்!'' என்று கூறி மணமக்களை ஆசீர்வதித்த வண்ணம் நிற்பர்.

மங்கலத் தீயினெதிரே நன்ருக அலங்கரிக்கப் பட்டிருக்கும் அந்த அழகான விதானத்தின் கீழ் வீற்றிப்பர் அந்த மணமக்கள். சிறிது நேரம் வழக்கமான சடங்குகள் நடந்தேற, வேதப் பிராமணர்களின் ஆணைப்படி திருமங்கலநாணுடன் கூடிய பொற்ருலியை மணுட்டியின் கழுத்தில் அணிவிப்பான் மணமகன். அவ்வமயம் மங்கலவாத்தியம் கணீர், கணீரென ஒலித்துக் கொண்டிருக்கும், நறுமணம் கலந்த மலர்மழை பொழிந்தவண்ண மிருக்கும், மங்கலவரிசி உதிர்ந்த வண்ணமிருக்கும், 'வாழ்க' 'வாழ்க' வென்ற ஆரவாரங்கள் மண்ணையும் விண்ணையும் அதிரச் செய்து விடும்.

புதுவருட விற்பனை
சோட்ஸ் சேட்ஸ்
கவுண் புஷ் சேட்
கவர்ச்சியும் நாகரிகமும் பொருந்திய
றெடிமேட் உடுப்புக்களை
சிறந்த ரகமாக குறைந்த விலையில்
எம்மிடம் வாங்குங்கள்
யாழ்ப்பாணம் றெடிமேட் ஸ்ரோர்ஸ்
6, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# சப்பை மூக்கை கிளிமூக்காக மாற்றலாம்!

## அழகான அங்கஅமைப்புகளுக்காக சத்திர சிகிச்சை!

### ஜேர்மன் டாக்டரிடம் செல்லும் நூற்றுக்கணக்கான பெண்கள்!

சந்திரனைத் தாவிப் பிடிக்க மனிதன் முயன்றுகொண்டிருக்கும் இந்த யுகத்தில் 'சாதிக்கமுடியாது' என்று எதையும் சிந்தியாமல் கூறிவிடமுடியாது. மனிதனை ஆக்கும் முயற்சி இன்னும் மேற்கொள்ளப் படவில்லையே அல்லாமல், இறந்தவனுக்கு உயிர் கொடுப்பது, 'ஊழ்வினைப்படி ஆண்டவன் படைத்துவிட்டான்' என்ற கூற்றை மாற்றி அமைத்து, அங்கங்களின் வேண்டியபடியெல்லாம் மாற்றங்கள் செய்யும் முயற்சிகள் எல்லாம் ஓரளவு வெற்றியை ஈட்டியுள்ளன.

வின்ஸ்டன் சேர்ச்சில், டாக்டர் அடினேர் ஆகியோர் இத்தனை வயதுக்கு மேலும் சுறுசுறுப்பாக இருப்பதற்கு டாக்டர் ஹான்ஸே காரணம் என்று சென்ற இதழில் நாம் விபரித்திருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இதே டாக்டர்தான் இன்னொரு அதிசயத்தைக் கூறுகிருர். அவரது கூற்று பெண்களுக்கோர் வரப்பிரசாதம்.

அழகற்ற பெண்கள் அவர் கூறுவதைக் கேட்டு சற்று ஆறுதல் அடைந்திருக்கிருர்கள்.

உடலில் உள்ள எந்த அங்கமாவது அளவுக்கு மீறி வளர்ந்தோ, சிறுத்தோ இருந்தால் அதைச் சரிசெய்துகொள்ளலாம் என்கிருர் டாக்டர் ஹான்ஸ்.

மூக்குச் சப்பையாக இருந்தால் அதைச் சத்திர சிகிச்சையின் மூலம் அழகான கூர்நாசி ஆக்கிவிடலாம். ஆனுல் மூக்கில் எந்தவித அடையாளமும் தெரியாதாம். அவசியம் ஏற்பட்டால் முன்காலில் முழங்காலுக்கும் பாதத்துக்கும் இடையேயுள்ள எலும்பில் ஒரு துண்டை வெட்டி எடுத்து மூக்கில் ஒட்டிவிடலாம். அதனுல் கால் ஊனமாகிவிடாதாம்.

காது, எலியின் காதுபோல் சிறுத்துச் சுருங்கி இருந்தால் அதையும் அழகான, அளவான காதாக்கிவிடலாம் என்கிருர் டாக்டர் ஹான்ஸ்.

அழகற்ற மூக்கை அற்புதமாக மாற்றியமைக்கும் முயற்சியில் ஏற்கனவே ஒரு டாக்டர் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளார். ஜேர்மனியைச் சேர்ந்த இவரது பெயர் டாக்டர் ஜாக்குஸ் ஜோசெப். இந்த டாக்டரிடம் தினசரி நூற்றுக் கணக்கான பெண்கள் சென்று சிகிச்சை பெற்றிருர்களாம்.

Visit

FANCY HOUSE

JAFFNA.

எமது, வாடிக்கைக்காரர், நண்பர்கள் யாவர்க்கும்

அன்புகலந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஸ்பாஸ் ஸ்ரூடியோ

11- ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

**'புதினம்' அடுத்த இதழில்**

யாழ்-மாநகர சபையின் மர்மங்கள்!

- கடவுளை அழைத்த மெம்பர்
- பிள்ளை மேல் சத்தியம்
- 'லைட்' அணைத்தவர் யார்?

''இராசதுரை என் மைந்தனைப் போல''
தமிழரசுத் தந்தையின் உருக்கமான விளக்கம்

- 'புதுமைலோலன்' எழுதும் சிறு கதை
மற்றும் சுவையான செய்திகள்

இலங்கை எங்கிலும் இணையற்று விளங்கும்

ஒரே ஒரு பீடி

ராஜ பீடி ஸ்பெஷல்

இன்றே இப்போதே

ராஜ பீடி ஸ்பெஷலே


உபயோகியுங்கள்

ராஜ பீடி கம்பெனி


கொழும்பு.

போன்: 2739

**மயிர் முளைத்தது! ஆனல்...... எங்கெல்லாம்?**



ஸ்ரீமான் சித்தப்பலம் (5) 'போர்ட்' பலகையில் ஒரு திருத்தம்




"யாழ்ப்பாணத்தில் மேயர் தெரிவு அடிக்கடி நடப்பதேன்?"

"ஆண்டுக்கொருவர் என்று பொருத்தம் எழுதியபடியால் இந்தமட்டில் பிழைத்தது! மாதம் ஒருவர் என்று எழுதிக் கொண்டால் மாநகர சபையில் நித்தியம் மேயர் தெரிவாகவே இருக்கும்!"


இன்றைய நாகரீகத்திற்கு



ஏற்ற காலணிகள், மற்றும் பெண்களுக்கும், ஆண்களுக்கும், சிறுவருக்கும் தேவையான எல்லாவகையான சப்பாத்துகள், செருப்புகள், சான்டல்கள், கால்மேசுகள், தொப்பிகள் உங்கள் விருப்பம்போல எல்லா அளவுகளிலும், சகாயமாகக் கிடைக்கும்.

இன்றே விஜயஞ் செய்யுங்கள்:

**பிரகாஸ் ஸ்ரோஸ்**

31,33 கஸ்த்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அழகு மிக்க கவர்ச்சியான



★ தங்க நகைகள் ★

உத்தரவாதத்துடன் கிடைக்கும்.

**புதிய ஆபரண மாளிகை**

NEW JEWEL PALACE

68, F, கன்னதிட்டி. யாழ்ப்பாணம்.

**சிறந்த போட்டோக்களுக்கு**



**ஞானம்ஸ்**

போட்டோக்கிருபர்ஸ்,
யாழ்ப்பாணம்.
போன்: 7067

Registered as a newspaper at the G. P. O.

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...


## வெளிநாட்டு மாணவர்மீது அரசாங்கத்தின் கண்!

வெளிநாடுகளில் விசேஷ துறைகளில் கல்வியிலும் இலங்கை மாணவர்களோடும், அவர்கள் பயிற்சி பெறும் ஸ்தாபனங்களோடும் தொடர்பு கொள்ளுமாறு அந்நாடுகளிலுள்ள தமது தூதராலயங்களுக்கு இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அத்தோடு மட்டும் அது நின்றுவிடவில்லை.

வெளி நாடுகளில் கல்வி பயிலும் மாணவர்களது பட்டியல்ஒன்றையும் தயாரித்து வருகிறது. 'பயிற்சி முடிந்து மாணவர்கள் இலங்கை வந்ததும் அவர்களுக்கு அந்தத்துறையில் உடனடியாக வேலை கொடுப்பதற்கே' என்றும் அரசாங்கம் சொல்கிறது.

பிரதமர் ஸ்ரீமாவோ சென்ற வருடம் பிரிட்டனுக்குச் சென்றபோது, அங்குள்ள இலங்கைமாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததும், அதைத்தொடர்ந்து வெளிநாட்டு மாணவர்கள் மீது அரசாங்கம் ஒரு 'கண்' வைத்திருப்பதும் வாசகர்கள் அறிந்ததே!

Stop!



Look!!

&

Visit!!!

For Better Eye Wears

at: ABDULLA&Co.,

Phone: 486

QUALIFIED OPTICIANS

K. K. S. Road, JAFFNA.

EYE Testing by Qualified Optician

DIAL: 281

CABLE: "JEWELLERS"

நவநாகரீக பவுன் தங்க வைர நகைகளுக்கு

என்றும் நினைவில் இருப்பது

L
LKS
J

"தங்க மாளிகை"

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

FOR Super Craftmanship

Lovable

Kind

Service

Visit

JEWELLERS OF RUPUTE

JAFFNA

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி.ச, வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி: அச்சகம்.